திராவிடநாடு

## ஏழாம் படிக்கட்டில் ஏறிவிட்டாய்!

[கருணானந்தம்]

★


சேரனும், சோழனும்,
செந்தமிழன் பாண்டியனும்
வீரவிதை யூன்றி
விளைத்திட்ட தென்னாட்டார்
பாராண்ட சேதி,
பழங்கதையாய்ப் போனதனால்—

ஆறாண்டு காலமாய்
ஆர்வமுடன் பாசறையில்
காவியம் பாடிவந்தாய்!
சாவின் பயம் நீக்கிக்
காவிரியின் வெள்ளமெனத்
தீவிரமாய்ப் பாய்ந்துவரத்

திட்டமிட்டு விட்டார்
திராவிடத்துச் சேய்மார்கள்!
கட்டுப்பா டுண்டு;
கடமையிலே கண்ணியந்தான்!
தங்கு தடையேதும்
இங்கினிமேல் வாராது!

சிங்க முழக்கமிடு,
சிங்காரப் பண்பாடு!
இன்ப புரிக்கேகும்
ஏழாம் படிக்கட்டில்
துன்பங் குறைவு—
தொடர்ந்தேறு மேன்மேலும்!!

# மக்கள் கரமும் மன்னன் சிரமும்




**எத்தன்** ஒருவனுடைய துணைகொண்டு, ஜேன் ஹோர்வுட் எனும் மாது, மன்னன் தப்பிச்செல்ல வழி கண்டாள். இரகசியக் கடிதங்கள் பல மன்னனிடமிருந்து, ஜேன் பெற்ருள். இந்தச் சதியும் அம்பலமாகிவிட்டது— தப்பிச் செல்லும் வழி அடைக்கப்பட்டுவிட்டது.

''மன்னவா! விடைபெற்றுக்கொள்ளட்டுமா! தாங்கள் இங்கிருந்து சென்றுவிடத் திட்டமிட்டிருக்கிறீராமே!'' என்று கேலிபேசி, எச்சரித்தான், கோட்டைக் கவர்னர்.

மன்னன் சிறவில்லையாம், சிரித்தானும்!

மாறுவேடம் புனைந்துகொள்வது, மறைந்திருப்பது, காட்டு வழிகளைக் கண்டறிவது, பலகணிக்கம்பிகளை அகற்றுவது, போன்ற சாகசச் செயலெல்லாம், மன்னன் செய்துபார்த்தான். திறமையை இந்தத் துறைக்கே செலவிட்டானே தவிர, காலத்தின் குறியை அறிந்து, மக்களிடம் தோழமைகொள்வோம் என்ற எண்ணத்தைப் பெற்ருனில்லை.

கரம், எக்காரணத்தாலோ வலுவடைந்துவிட்டது, அதனுலேயே, நாம், இவர்களிடம் சிக்கிவிட்டோம், அவர்கள் தம் வலுவை இழந்துவிடுவர், விரைவிலில்லாவிட்டாலும் சிலகாலம் சென்ருனபிறகு, அப்போது மீண்டும் தர்பார் நடத்த இயலும், புரட்சிக்காரரைப் பொசுக்கிவிடலாம் என்று பகற்கனவு கண்டபடி இருந்தான் மன்னன். கருத்து, சதித்திட்டம், சாகசம் இவற்றிலேயே படிந்திருந்தது.

மன்னன் நிலை இவ்வாறிருக்க, மாவீரன் கிராம்வெல் ஸ்காத்லாந்துக்காரர் எதிர்ப்புரட்சி நடத்தக்கிளம்பியதை அழித்தொழித்து வெற்றிகண்டான்.

மன்னன் எந்தத் திக்கிலெல்லாம், உதவிகிடைக்குமென்று எண்ணிக்கொண்டிருந்தானே, அங்கெல்லாம் கிராம்வெலின் வெற்றி முரசும் கேட்கலாயிற்று. இடிகேட்ட நாகமாயினர் சதிகாரர்கள். கடைசிகட்டம் வந்துவிட்டது; இனி மன்னன் தன் ஆதிக்கத்தை மீட்டுக்கொள்வது இயலாத காரியம் என்பதுவிளக்கமாகிவிட்டது. நாட்டுக்கு தக்கதோர் ஏற்பாடு செய்யும் தகுதி படைத்த தலைவன் ஆலிவர் கிராம்வெல் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டியதாகிவிட்டது. படையிலே வீரம், நிர்வாகத் துறையிலே திறம், பொதுவாகவே தன்னலமறுப்பு, இவைகள், கிராம்வெலின் அரண்களாயின.

**சி. என். அண்ணாதுரை**

மாமன்றத்திலே, முணுமுணுப்பாளர்கள், முன்னை நினைவுகளை விட மறுப்போர், ஆகியவர்கள், விரட்டப்பட்டனர்—மாமன்றம் பணியாற்றவேண்டிய அளவு முடிந்துவிட்டது, இனி ஒரு பலம் பொருந்திய அரசு முறை வகுத்தாகவேண்டும், அந்தப் பணிக்காக, கிராம்வெலுடன் ஒத்துழைக்கக்கூடியவர்களுக்குமட்டுமே, மாமன்றத்தில் இடம்! ஐம்பதின்மரே, இதுபோது மாமன்ற உறுப்பினர்கள்.

மன்னனை என்ன செய்வது? பெரும் பிரச்னையாகிவிட்டது. மறப்போம், மன்னிப்போம்! என்று கூறிட மக்களில் ஒரு பகுதியினர்; மற்ருேர் பகுதியினரோ, குறிப்பாக, படையினரோ, ''மன்னன் மக்கள் துரோகி! ஒழித்துக் கட்டத்தான் வேண்டும்'' என்று கூறினர்.

''அவன்'' வழி காட்டுவான் என்ருன் மன்னன். ''அவன்'' கட்டளைப்படி நான் நடந்துகொள்வேன் என்ருன் கிராம்வெல்.

பிரிட்டனில், சிறையில் மன்னன் — சொந்த அரண்மனையில்தான், ஆனால் பல்லும் நகமும் போன புலி!

விசாரம், வேந்தனைக் கிழவனுக்கிவிட்டது—தலைமயிர் நரைத்துவிட்டது—கண்ணொளி குறையலாயிற்று—அழகழகாகச் சுருளை சுருளையாக இருந்த முடி, பொலிவிழந்துவிட்டது. எந்த மன்னனும் பெறத் துணியாத பெருநிலை கேட்டவன் சார்லஸ்! ஆண்டவனுக்குச் சமம் அரசன் என்ற தத்துவம் பேசினவன். மக்களுக்கு, எது உரிமை, எது நன்மை என்பதை அறியும் ஆற்றலே மன்னனுக்குத்தான் உண்டு என்று வாதாடியவன். அந்தத் தீதான தத்துவத்துக்காக ஒரு நாட்டையே படுகளமாக்கிவிட்டவன், பதினோராண்டுகள் மாமன்றம் கூட்டாமல் அரசு புரிந்தவன். பிரபுக்கள் பலர் பணிவிடை செய்வர். பிரதாபம் கூறிடுவோர் பலர்! அவனை எதிர்த்தோர், சிறையிலும், தூக்குமேடையிலும் உயிரிழந்தனர்! அப்படிப்பட்ட சார்லஸ் மன்னன் அடைபட்டுக் கிடக்கிருன்; ஆலிவர் கிராம்வெல்லின் பேனு முனையில், மன்னன் எதிர்காலம் இருக்கிறது.

கணவனுக்கு உற்ற கதியை எண்ணிக் கண்ணீர் வடித்தவண்ணம் எனிரிட்டா அரசி; பிரான்சில்.

இடையே கடல், ஒருபுறம் மன்னன் சிறையில், மற்ருேர்புறம் சிறையிலும் கொடிய நிலையில் ராணி பிரான்சில்.

இளவரசன், தந்தையுடன் இல்லை. கடைசி மகனும், மகளும்மட்டுமே பிரிட்டனில உள்ளனர்.

4-ம் பக்கம் பார்க்க

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14 ] 18-9-55 [ இதழ் 11

# நாடு, கொண்டாடுகிறது

செப்டம்பர் 17!—எப்படி மறக்கமுடியும் இந்த நாளை?

1949 செப் 17-ந் தேதிதான், விழிகளைக் குளமாக்கிக்கொண்ட வீரரெல்லாம் ஒன்றுகூடி சென்னைமா நகரிலே, திராவிட முன்னேற்றக் கழகம், அமைத்தனர். அந்த இலட்சிய தினத்தை, யாரே, மறக்கவியலும்? அரும்பு, கருகி, புழுதிமேட்டுக்குப் போய்விட்டால் அதுபற்றி பொருட் படுத்தார் எவரும்! மலராகிற்று—கருக வில்லை—மணம் பரப்புகிறது, நாட்டில்; நாள்தோறும்; இடைவிடாது.

இத்தகைய அருமையான கழகத் தைக்கட்டிக்காத்து வரும் தோழர் களுக்கு "செப்டம்பர் 17 முதல் 23 வரை நாட்டுப் பிரிவினை வாரம் கொண்டாடுங்கள். தி.மு.க. 6வது ஆண்டு விழாவும் நடத் துங்கள்" என்று பொதுச் செயலாளர் விடுத்திருக்கும் அறிக்கை, பூரிப்பையும் குதூகலத்தையும் உண்டுபண்ணு வதில் வியப்பென்ன? குருடனாகிக் கிடந்தவன்' அவன்! குழிபறிக்கப் பட்டது, வீழ!! சிறிதுநேரமாகியிருந் தால் குழியும் குருடனும் ஒன்ருகியிருப் பார்கள்—அந்தச்சமயத்தில், அவன் அடையும் கலக்கத்தைப்போல 1949 ஆண்டு, நமது கழகம், கலங்கிற்று; துடித்தனர் நம் தோழர்கள், இவ்வளவுதானே, நாம் பட்டபாடு? என்று ஏங்கினேர், ஏராளம். அனைவருக்கும் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக முளைத்தது, முன்னேற் றக்கழகம். முழுநிலா — அழகு வானம் — அருவி — மலர்ச்சோலை; இப்படி வர்ணிக்கப்படுகிற அளவுக்கு, வளர்கிறது, வளர்கிறது, மாற்ருரும் வாழ்த்த வளர்கிறது.

வளர்வதுமட்டுமா? தென்னகத்து அரசியல் வாழ்வில், தன்னிகரற்ற தனிப்பெரும் கட்சியாகவும் உரு வெடுத்து விட்டது. ஆண்டுகள், ஏழே, அதற்குள், இவ்வளவு பெரியவெற்றி, அது இல்லாத இடமில்லை; அதன் எண்ணங்கள் செல்லாத இடம் கிடையாது.

*

தோள்தட்டிற்று கம்யூனிஸ்டுக் கட்சி! எம். எல். ஏக்களும், எம். பிக் களும் தேர்ந்தெடுக்கப்பட்டதும், விறைத்தே பார்த்தது. பார்வையில் தென்படும் மிடுக்கைக் கண்டு பண்டித நேருவும், அவரது 'அந்த நேரத்து' அரசியல் ஆசான் அமெரிக்காவும்கூட மிரண்டனர்! சுருண்டோடச்செய்து விடுவரோ, நம்மை!!—என்றும், கதி கலங்கினர். அவர்தம், மயக்கம் கண்ட, 'மார்க்சு, பாதையினரும், "பாரீர், எமது செஞ்சீனாவை! பண்டிதரே, பதில் கூறும்? ஆகுமோ, எமது ரஷ் யாவைப்போலச் செய்ய? அலகாபாத் பாசிஸ்டே பதில்சொல்லும்!" என்று, அதிகாரக் குரலுடனேயே கேட்டனர். ஆனால், இப்போது! ஆண்டுகள் சில தான், உருண்டன. கம்யூனிஸ்டுகளின் கர்ச்சனைக்கு மூடிபோடுவதுபோல, அவர்கள் எந்த ரஷ்யாவைப்பற்றிப் பேசினரோ அந்த ரஷ்யாவுக்குச் சென்றும்—எந்த நவசீனத்தை நாவார வாழ்த்தினரோ அந்த செஞ்சீ னத்துக்குப் போயும் — பாமாலையும் பூமாலையும் பெற்றுக்கொண்டுவந்து, நிற்கிருர் நேரு! கர்ச்சனை மாறி, அர்ச் சனை ஆரம்பமாகியிருக்கிறது கம்யூ னிஸ்டு வட்டாரத்தில்! வெகு சீக்கிரத் தில், அவர்களை வீழ்த்திவிட்டார், பண்டித நேரு.

இது, பண்டிதரின் பராக்கிரமத் தைக் காட்டுகிறது — என்று கூற வில்லை நாம். இந்நாட்டுக் கம்யூனிஸ்டு களின் போக்கு அவரைப் பராக்கிரம சாலி ஆக்கிவிட்டது—பார்க்கிருர், கர் வத்துடன்! சிரிக்கிருர், செஞ்சட்டைக் காரர்களைப்பார்த்து!

தேசிய இயக்கத்துக்கு அடுத்தபடி இந்திய மண்ணில் உருவாகிவரும் ஒரே ஒரு கட்சி கம்யூனிஸ்டுகளுடை யது—என்றோர் கருத்து, ஏற்பட்டது, ஒருபோது! அதற்கு, சம்மட்டி அடி கொடுக்கப்பட்டுவிட்டது இப்போது!

பிரஜாசோஷியலிஸ்டு — ஐயோ பாவம், அதைப்பற்றி விமர்சிக்காம லிருப்பதே, நல்லது.

சில்லரைகள் பல உண்டு—இப்படி, அகிலஇந்தியரீதியில் இயங்கமுனைந்த எல்லாக் கட்சிகளும், இன்று, சருகா கும் கட்டத்துக்குப் போய்க்கொண்டி ருக்கின்றன.

எந்த அரசியல் இயக்கங்கள் தனது நாடு—தனது மொழி—தனது வாழ்வு என்று சொல்லிப் போராடுகின்றனவோ, அவைகளே தழைத்துக்கொண்டுள் ளன. பஞ்சாபிலுள்ள, சீக்கியர் இயக் கமும், அஸ்ஸாமிலுள்ள நாகர்தம் கிளர்ச்சியும் போதும் — உதாரணத் துக்கு. சங்கொலி கேட்டதும், தயா ராகச் சென்றனர், ஆயிரக்கணக்கில், சிறைக்கு, பஞ்சாப்பில், 'தனது நாடு' என்பது தவிர்த்து, தமது மதம், தமது கடவுள், என்பதற்காகப் பாடு படும் இந்துமகாசபையும் அதன் கிளை களும் கூட இருக்கின்றன. இவை களால், வைதீகர்களையும், மதவெறி யர்களையும் திரட்டமுடிகிறதே ஒழிய, மாணவர்களை — தொழிலாளர்களை— வாலிபர்களை — ஒன்று சேர்க்க முடிய வில்லை, வயோதிகர் தம் கூடாரம் அது—எனவே, கணக்கில் சேர்க்க வேண்டியதில்லை, வருங்கால உலக மாகிய நாம்.

*

ஒருபோது பெரிதென விளங்கிய தேசீய இயக்கத்துக்கு, கம்யூனிஸ்டு களின் வாயை மூடத்தெரிகிறது— சோஷியலிஸ்டுகளை மண்டையிலடிக்க மார்க்கம் கற்றிருக்கின்றனர், ஆனால் "மாதாவுக்குச் சமானம் என்னாடு! அதன் வாழ்வுக்குப் பாடுபடுவதே என் இலட்சியம்! என்று வீரமொழி பேசும், விடுதலைப் படையின் முன், அவர்கள் முதுகெலும்பு ஒடிந்தவர் களாகிருர்கள். விடுதலை இயக்கங் களின் வளர்ச்சியை அழிக்க, சொல் லம்புகளை வீசினாலும்; துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்தாலும்; சிறைக் கூடங்களை நிரப்பினாலும், இயல வில்லை. முடியவில்லை. தாய் தடுத்தாலும் விடேன். என்று கூறியவண்ணமன்றோ, ஈசல்போலக் கிளம்புகிறது, விடுதலைப் படை.

அப்படிப்பட்ட விடுதலைப் படையின், கூடாரமாகிவிட்ட தி. மு. கழகம் ஒரு வார காலம் தன் இலட்சிய முழக் கத்தை நாட்டவருக்கு எடுத்துச் சொல்லும்; தனக்கு வயது ஏழாகி றது என்று சொல்லி இன்பம் அடையும்; என்ருல், மக்கள் வாழ்த் தவே செய்வர். மனமகிழ்ந்து போற் றவே, செய்வர்.

**தி. மு. க. தென்னாட்டின் விடுதலை இயக்கம்.**

**திராவிட நாடு, திராவிடருக்கே!- இதுவே, அதன் இதய முழக்கம்.**

**ஆதிக்கக்காரர்கள் அட்டகாசம் ஒழிக! —அரசியலில், சமூகவியலில்; பொருளிய லில்; என்பதே அதன் மூலக்கொள்கை.**

இந்த அரிய இலட்சியங்களைக் கொண்டிருப்பதால்தான், இது அருகு போல் வேர்விட்டு ஆல்போல் தழைத்து வளருகிறது.

அந்த வளர்ச்சி, நாள்தோறும் அதிகமாகும் எனும் நம்பிக்கை எழக் காரணம்-ஏனையக்கட்சிகளையெல்லாம், பூாசம் காட்டியோ, பல்லை இளித்தோ

பதவிச் சுண்டல் தந்தோ, 'பார் என் புகழை. எனச்சொல்லியோ வளைக்கும் காங்கிரஸ் பாசீசம்; நம்மை அண்டவும் அஞ்சுவதுதான். அண்டினுல் அனலாகித் தகிக்கும் தி. மு. க. என்பதை அறிகிருர்கள், அவர்கள். ஆகவே, தமது ஆத்திரத்தையெல்லாம் கொட்டி, அழிக்கும் வாய்ப்பு ஏற்படாதா?-என்று ஆரூடம் பார்த்துக்கொண்டிருக்கிருர்கள்.

இதுபோன்ற, ஆரூடங்கள், ஆயிரமாயிரத்தை நாம் தாண்டியிருக்கிரேம் என்பதை நாடு அறியும்; நாடு, நம் மீதுவைத்திருக்கிற நம்பிக்கை மிகப் பெரிது; வேறுயாரும் பெற்றிராத நம்பிக்கை—பெரியதொரு நம்பிக்கை, அந்தநம்பிக்கையின் காரணமாகவே; இன்றுமுதல் ஒருவாரம், பொதுச்செயலாளர் அறிக்கைப்படி விழாவும் பிரிவினைவாரமும் ஆங்காங்கும் நடைபெறுகிறது குதூகலத்தோடு. அந்த நம்பிக்கை வளரவும், நமதுபாசறைகள் நோக்கிப்பலரும் வந்துசேரும் வண்ணம்பணியாற்றவும், ஒவ்வொருகழகக் காளையரும் இந்நன்னுளில் சபதம் எடுத்துக் கொள்வார்களாக,

எதிர்காலம்நமதே-திராவிடம்அடைவோம். எள்ளளவும் ஐயமில்லை. பிற கட்சிகளல்ல, நாம்; தாயகத்தின் தன்மானத் தூதர்கள். இருள் போக்கக் கிளம்பிய விடி வெள்ளிகள். எனவே, நிச்சயம், வெற்றிபெற்றே தீருவோம் இன்றில்லாவிட்டாலும், நாளை-நாளையில்லாவிட்டாலும் விரைவில்ஒரு நாள்'வெற்றி வெற்றி' என்று முரசு கொட்டவே செய்வோம். அதற்கான அறிகுறியும், தோன்ற ஆரம்பித்துவிட்டது — மாற்றுக் கூடாரங்களில். மக்களும். நமது கருத்துக்களை, உணர்ந்து மதிக்கத்தக் தலைப்பட்டுவிட்டார்கள்.

இதைவிட வேறென்ன வேண்டும் இலட்சியத் தூதர்களாகிய நமக்கு? எண்ணிடுங்கள், இதனை; இலட்சிய முழக்கம் எழுப்புங்கள், எங்கும்.

★

# சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே; பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

நிர்வாகி

2-ம் பக்க தொடர்ச்சி

"என் தலையைவெட்டிவிடுவார்கள், மகனே! வெட்டிவிடுவார்கள்!" என்று மகனிடம் மன்னன் கூறுகிருன். மன்னனிடம் கடைசி நாள்வரை பணியாளராக இருந்தவர்கள் கசிந்துருகி அழுகிருர்கள். மன்னன் சாகத் துணிந்துவிட்டான்; படையினரின் போக்கை ஆதரித்த மாமன்றம் மரண ஓலை தயாரிக்க இணங்கிவிட்டது.

ஜான்பிராட்ஷா என்ற வழக்கறிஞரைத் தலைவராகக் கொண்ட ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. 133-உறுப்பினர்கள். வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்தில் கூடிய இந்த விசாரணைக் குழுவுக்கு, மன்னன் அழைத்துவரப்பட்டான்.

"நான் உங்கள் மன்னன்! என்னை விசாரிக்கும் தகுதி இந்தக் குழுவுக்குக் கிடையாது. எந்த அதிகாரத்தின் பேரில், என்னை விசாரிக்க முற்பட்டீர்கள்" என்று கேட்டான் மன்னன்.

"மக்கள் தந்த அதிகாரத்தால்!" என்று பதிலிறுத்தார் பிராட்ஷா. மன்னன்தான், மக்களுக்கு அந்தத் தகுதி கிடையாது என்ற தத்துவம் கொண்டவனுயிற்றே, விசாரணைக் குழுவின் தகுதியை ஏற்றுக்கொள்ள மறுத்தான்.

குழுவின் கேள்விகளுக்குப் பதில் தருவதில்லை; குறுக்குக் கேள்விகளும் எழுப்புவதில்லை, "என்னை விசாரிக்கும் தகுதி உங்களுக்கு இல்லை" என்றே கூறிவந்தான்—மூன்று நாட்கள்.

முடிவில், மக்கள் உரிமைகளைப் பறித்து, எதேச்சாதிகார ஆட்சி நடத்தி, இறுதியாக மக்கள்மீதே போர் தொடுத்த மாபெரும் துரோகத்துக்காக, மன்னன் சார்லசைத் தூக்கிலிடுவது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.



சிரம் இழந்தவன்

மன்னனைத் தூக்கிலிட மக்கள் தீர்ப்பளிக்கிருர்கள்! மக்கள்! வெடிமருந்துக் கிடங்கோ? பசும் புற்றரை மேலே, கீழே வெடிமருந்துக் கிடங்கு என்பதுபோல, அஞ்சி அஞ்சிச் சாகிறவர்களாக, ஆளடிமை செய்பவர்களாகத் தோற்றமளிக்கும் மக்கள், தாங்கக்கூடிய அளவு தாங்கியான பிறகு வெடிமருந்துச் சாலை போலாகிவிடுகின்றனர் —அரியாசனங்கள் ஆடுகின்றன, மணி முடிகள் சிதறுகின்றன-முடிமட்டுமா! முடிதரித்த சிரமே, இதோ வெட்டப்படுகிறது.

ஓராண்டு ஈராண்டுக்கு முன்பு கூறியிருந்தால் நம்பி இருக்கமாட்டார்கள்—பத்தாண்டுகளுக்கு முன்பு சொல்பவன் பிணமாக்கப்பட்டிருப்பான்—ஆனுல் இதோ 1649-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முப்பதாம் நாள், மன்னன் சார்லஸ், அவன் அரண்மனைக்கு எதிரே அமைக்கப்பட்ட தூக்குமேடைக்கு அழைத்துக்கொண்டு வரப்படுகிருன்.

எதிரே மக்கள் திரளாக, ஆனுல் கண்டனம் இல்லை, கலகம் இல்லை, இந்த நிலைக்குத் தன்னைத்தானே துரத்திக் கொண்டானே மன்னன், என்ற வருத்தம் தோய்ந்த முகத்துடன் உள்ளனர்.

மன்னன் வருகிருன், படை வீரர்கள், முரசுகளைக் கொட்டுகிருர்கள்.

மன்னன் தூக்குமேடை ஏறுகிருன்-உடன் இருக்கும் உற்ற நண்பர்கள் அழுகிருர்கள் — ஒருவர் மயக்கமுற்றுக் கீழே சாய்கிருர்.

மன்னன் பதறவில்லை, கதறவில்லை, சிரத்தைச் சாய்க்கிருன்-ஒருவெட்டு-சிரம்துண்டிக்கப்பட்டுவிட்டது-"இதோ துரோகியின் தலை" என்று ஒருவன் எடுத்துக் காட்டுகிருன், தத்துவத்தால் தன்னைத்தானே அழித்துக்கொண்ட சார்லசின் சிரத்தை!

**மக்கள் கரம், மன்னன் சிரத்தையும் கொய்துவிடும் வலுப்பெற்றது.**

**அது ஏர்பிடிக்கும், துலாக்கோல் பிடிக்கும், கூப்பும், தழுவும், வரிசெலுத்தும், வணக்கம் கூறும்,—ஆனுல் தாங்கொணுத கொடுமைசெய்து, உரிமையைப் பறித்திடக் கொடுங்கோலன் கிளம்பினுல், அந்தக்கரம், அவன் சிரம் அறுக்கும். சார்லஸ் சம்பவம் இதைக் காட்டும், பயங்கரப் பாடம்! பாராள்வோர் எப்போதும் நினைவில் வைத்திருக்கவேண்டிய பாடம்!!**

[ முற்றும் ]




கருத்தளிக்கும் கற்பனை

சமூக சேவகி சாருபாலாவுக்குச் 'சளி ஜுரம்' — 'சாந்திபவனம்' அல்லோலகல்லோலப்பட்டது— இன்கம் டாக்ஸ் ஆபீசர் கோதண்டராம ஐயருடைய ஏகபுத்திரி, சாருபாலா; அமர்க்களமாகத்தானே இருக்கும். அதிலும் சாருபாலா, சமூக சேவை செய்து பிரபல்யமடைந்துகொண்டிருந்த குமாரி. முகிலுக்கிணையான குழல்; அது தழுவியிருந்த வட்ட நிலவு முகம்; பிறைநெற்றி, பேசும் கண்கள், துடிக்கும் அதரம், அங்கம் தங்கம்; நடை நாட்டியம்; பேச்சோ கீதம் — வயது இருபத்திரண்டு; படிப்பு இன்டர்.

அலங்கார மூக்குக் கண்ணாடி, அலங்காரப் பை, அதியலங்கார பூட்ஸ் வைரத்தோடு, கையில் ரிஸ்ட்வாட்சு, கழுத்தில் மெல்லிய சங்கிலி — எப்போதும் புன்னகை; எவரிடமும் இன்முகம்—சாருபாலா அந்த நகரில் ஒரு காட்சியாகிவிடாமலிருக்கமுடியுமா!

"வருமானம் மிகவும் குறைவு; இந்த வருஷம் மிகுந்த நஷ்டம்" என்று குறையைக் கொட்டிக்கொண்டு, ஆபீசருடைய கருணையைப் பெற்றுக்கொண்டு வருவோம் என்று சகுனம் பார்த்துக்கொண்டு கிளம்பிய கஞ்சமெல்லாம், அந்த கனகப்பதுமையைக் கண்டதும், தன் வியாபாரப் பெருமையைக் கூறிவிட்டுவருவார் என்றால், பார்த்துக்கொள்ளுங்களேன், அந்தச் சுந்தரி கிளப்பிய சூறுவளியின் தன்மையை.

கோதண்டராமஐயர், எப்போதும் தன் 'பார்யாள்' கிறிய கோட்டினைத் தாண்டாதவர்; அந்த அம்மாளுடைய இராசியால்தான், தனக்குப் பெரிய பதவி கிடைத்தது என்பதிலே அவருக்கு அபாரமான நம்பிக்கை. சாருபாலா ஒரே மகள், எனவே, ஐயர், தன் சகதர்மிணியின் விருப்பத்தின்படி, சாருவுக்குச் சர்வசுதந்திரம் கொடுத்திருந்தார்.

"கோந்தை, வெளியே போகணுமானு, நீங்க ஆபீசிலே இருந்து வருகிறவரை காத்திண்டிருக்காகாருக்காக. சிறுசா ஒரு கார், ஆஸ்டினோ, வாக்சாலோ வாங்கிக் கொடுத்துவிடுங்கோ—அது சாயந்திரமானு கிளப்புக்குப் போய்வரச் சௌகரியமாக இருக்கும்" என்று அம்மையார் கூறுவார், அடுத்த வாரம், ஆஸ்டின் வந்து நிற்கும், 'சாந்திபவனில்'—அவ்வளவு செல்லமாக வளர்த்து வந்தார்கள் சாருபாலாவை! தங்கக்கொடி, அதற்கு வைரத்தில் பாத்தி என்று வைத்துக்கொள்ளுங்களேன்! தங்கமும் வைரமும் ஜொலிக்கும்—சாருவைப் போல பார்க்குமா, பேசுமா, சிரிக்குமா!!

சாருபாலாவுக்குச் சளிஜுரம் என்றவுடன், சாந்திபவனம் அல்லோலகல்லோலப்பட்டது.

சமயற்காரர் விசாரணைக்கு ஆளானர்!

"கோந்தைக்கு சளி இருப்பது தெரிந்தும், ஏன் வெண்டைக்காய் சாம்பார் செய்தாய். சுத்த மண்டுடா, நீ"—என்ருர் ஆபீசர்.

தோட்டக்காரன் கேள்வித் தாக்குதலில் சிக்குண்டு தவித்தான். ஆறுமணிக்குமேல், சாரு தோட்டம் வந்தபோது, ஜில்லென்று பனிவாடை அடித்ததே, ஏன் அதைச் சொல்லி உள்ளே போகச் செய்யவில்லை என்று கேட்டனர்.

வேலைக்காரிகள் கண்டிக்கப்பட்டனர்—மோட்டார் டிரைவர் எச்சரிக்கப்பட்டான்— இவ்வளவும், சாருவுக்கு 101-இருந்தபோது!

"ஏண்டி இப்படி வீணு உடம்பைப்போட்டு அலட்டிக்கறே; அப்பாவோட மனதுக்கும் சங்கடம் உண்டாக்கறே, நான் இப்பத்தான் தர்மாமிடர் வைத்துப் பார்த்தேன், 101-தான் இருக்கறது" — என்று சாரு சொன்னுள் — மனது கேட்கிறதா, கடைமட்டும் சிவந்திருக்கும், கண்கள் இப்போது முழுவதும் இலேசாகச் சிவந்து காணப்பட்டது, முகம் எப்போதும் பளபளப்புதான், இப்போது புது மினுமினுப்புத்தெரிந்தது, பேசும்போது நாலைந்து தடவை இருமலும் இருந்தது — கவலைப்படாதே என்று சொன்னுல், மனம் கேட்கிறதா— டாக்டர் வரவழைக்கப்பட்டார்.

டாக்டர் இரகுராமன், அரும்பு மீசைக்காரன் — ஐயர் தான் — ஆனுல் ஏதோ இந்த மீசைவைத்துக் கொள்ளத் தங்களுக்குத்தான் தெரியும் என்று பார்ப்பனரல்லாதார் பெருமை பேசிக் கொள்கிருர்களே, என்னுல் மட்டும் முடியாதா பார், என்று 'சவால்' விட்டுவிட்டு, மெடிகல் காலேஜில் ஆரம்பித்தார் மீசை வளர்க்க! மீசையும் அழகாக அமைந்திருந்தது.

டாக்டர் இரகுராமனுக்கு எந்த மங்கையையும் மயக்கும் அலாதி

யான அழகு தன்னிடம் இருப்பதாக, பல ஆண்டுகளாக நம்பிக்கை. பெண்களிடம் பல்லிளிப்பதும், அவர்களின் அழகைக் கண்டு வாயைப் பிளப்பதும், அவர்கள் பேசினுல் மெய்மறந்து போவதும், அவர்களிடம் பேசினுல் குளறிக் கொட்டுவதும், ஆடவரில் அசடரின் செயல்; ஒரு அலட்சியமான பார்வை, ஒரு சிறு புன்னகை, ஒரு விநாடியில் அதுவும் மறைந்துவிட வேண்டும் — பெண்களிடம் இவ்விதம் நடந்துகொண்டால்தான் அவர்களுக்குக் கர்வபங்கம் ஏற்படும் என்பது டாக்டரின் மருத்துவ முறை — கல்லூரி நண்பர்களிடம் அடிக்கடி கூறிவந்திருக்கிருன்.

நூக்கமரக் கட்டிலில், டபேடா உறைபோட்ட மெத்தை தலையணை போட்டு வைக்கப்பட்டிருந்தது. ஐந்தாண்டுத் திட்டத்தில் அனை வருக்கும் பங்கு உண்டு என்று எழுதப்பட்டு, நேருபண்டிதருடைய படம்—பாரதமாதாபடம், சுவரிலே! மேஜைமீது, பாரதியார், சரத்சந்திரர், ஷெல்லி, ஷேக்ஸ்பியர்! ஜன்னலில், ஒரு புத்தர் சிலை—சிறிது மூளியாகிப் போனநிலையில். பக்கத்தில் சாயிபாபா சிலை, புத்தம் புதியது. கட்டிலின்மீது அந்தக் கட்டழகி! கண்களை மூடிக்கொண்டிருக்கும் நிலை! ஆனுல் கன்னத்தில் "அழகுக்குழி" காணப்பட்டது— ஏதோ உள்ளூர ஒருவகையான சந்தோஷம். முகத்திலே பாண்டு ஸ்னோவும் பவுடரும், ஊதுவத்தி மணம் அறையில் கமழ்ந்தது; இலைப்பச்சை ஜார்ஜட் சேலை, அதற்குப் பொருத்தமான 'ஜாக்கட்' — சாருபாலாவை அந்தக் கோலத்தில், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கடுந்தவம் புரிந்து வரும் முனிவர்கள் கண்டாலே போதும், விசுவாமித்திரர் ஆகிவிடுவர்—பாபம்—டாக்டர் இரகுராமன் கண்டால் என்ன ஆவான்! குளறிருன்—தெர்மாமீடரைத் தலைகீழாக வைத்து சாருவின் கிண்டலால் தாக்குண்டான் — எவ்வளவு காலமாக இருக்கிறது என்று கேட்கிருன், அவள் சிரிக்கிருள், மெல்லிய குரலில் 'பைத்யம்' என்று கேலி செய்கிருள். வந்ததற்கு எதையாவது தரவேண்டுமே அதற்காக காட்லிவர் ஆயில் மாத்திரைகளைக் கொடுத்துவிட்டு, மருந்து அனுப்பிவைப்பதாகச் சொல்கிருன்.

"எனக்கு, இந்த ஜுரம் ஒன்றும் பிரமாதமில்லை. ஆனுல், டாக்டர்! இராத்திரி வேளையிலே, நல்ல தூக்கம் வரமாட்டேனென்கிறது"

"காற்று நன்ருக வருகிறதல்லவா! இல்லையானுல் மாடியில் படுத்துக்கொள்ளலாம்"

"மாடிதானே இது......"

"ஆமாம்...மாடியில் என்ருல் வெளியில்...ரூமில் அல்ல, வெளியில் படுக்கலாமே என்று சொன்னேன்"

"வெட்ட வெளியிலா! ப்ளூ வந்துவிடுமே..."

"ஆமாம், ப்ளூ வந்துவிடும், ரொம்பக் கெட்டது..."

"டாக்டர், இங்கு நல்ல காற்ருேட்டம் இருக்கிறது...எனக்குத் தூக்கம் வராததற்குக் காரணம் அதுவல்ல..."

"ஏதாவது வலி எடுக்கிறதா... தலையில், கைகால்..."

"நானென்ன நோயாளின்னே தீர்மானமா டாக்டர்..."

"நோ! நோ! ரொம்ப ஹெல்த்தியாத்தான் இருக்கிறீர்கள்..."

"என் சிநேகிதிகளெல்லாம் என்னைச் கேலி செய்யரு, உனக்கென்னடி சாரு, நல்ல ஆப்பிள் போல இருக்கறேன்னு..."

"கோல்டன் ஆப்பிள்...கோல்டன் ஆப்பிள்...! அதாவது...அதாவது ......"

"அதாவது இதாவது, கேலி பேசறதுக்காகவா, உம்மை இங்கே வரச்சொன்னு..."

"நோ! நோ! மன்னிச்சுடுங்கோ... ஏதோ ஒரு மாதிரியா இருக்கு... எனக்குக் கொஞ்சம் தேர்த்தம்..."

"வெந்நீரா..."

"ஆமாம்...எப்பவும் நான் சோடா, ...இல்லாவிட்டால் வெந்நீர்தான் சாப்பிடுவது வாடிக்கை...இராத்திரியிலே மட்டும், ஐஸ்வாடர் சாப்பிடுவேன்..."

"இப்போ,வெந்நீர்தானேவேணும் ......"

"இருந்தா......கொடுக்கச் சொல்லுங்க..."

"இருந்தா கொடுங்களா......சத்திரம் சாவடியானுக்கூட வெந்நீர் கிடைக்குமே, எங்க ஆத்தைப்பத்தி ரொம்ப மட்டமான அபிப்பிராயம் போல இருக்கே உங்களுக்கு..."

"ஐயயோ...தப்பா எடுத்துண்டிங்களே..."

"இதோ ஒரு விநாடியிலே கொண்டுவரேன்...சித்தே உட்காருங்கோ...வந்ததிலே இருந்து நின்னிண்டே இருக்கிறிங்களே..."

"பரவாயில்லே....பரவாயில்லே... கிளாசிலேயே எனக்குப் பழக்கம்... அதாவது எப்பவும் வாக்கிங் டென்னிஸ், இப்படி..."

உள்ளே சென்ருள் சாருபாலா, டாக்டருக்கு வெந்நீர்கொண்டுவர!

டாக்டர், திகைத்துப்போய் நாற்காலியில் உட்கார்ந்தார். ஜுரம் வரும்போலிருந்தது.

"சாரு! உனக்கு உடம்பு இருக்கிற இலட்சணத்துக்கு நீ, எழுந்து வரலாமா...டாக்டர் கையலம்பத் தண்ணீர் கேட்டா, நாங்கள் கொண்டுபோய்க் கொடுக்கறேரும்... நீ உடம்பை அலட்டிக் கொள்ளாதே" என்று புத்தி கூறிக்கொண்டே, உள்ளே வந்த பர்வதம், "டாக்டர் கோந்தைக்கு எப்படி இருக்கு உடம்புக்கு. பயப்படற மாதிரி ஒண்ணுமில்லையே" என்று கேட்டபடி, பீதிபடிந்த டாக்டரின் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, "உங்களுக்கு என்ன உடம்புக்கு?" என்று கேட்கவேண்டியிருந்தது. டாக்டருக்கு மேலும் சங்கடம் ஏற்படாதபடி சாருவின் பிரவேசம் இருந்தது. தேன்—பால்—பழரசம்... எல்லாம்...தேவாமிருதம் ன்கிருர்களே, அதை அல்லவா சாப்பிடுகிருர் டாக்டர்...

"தாங்க்ஸ்....! நோ...போதும்.... நீங்கள் உட்காருங்கள்...இல்லை... இல்லை......படுத்துக்கொள்ளுங்கள் ......"

"டாக்டர்! கால்ஷியம் இன்ஜக்ஷன் நல்லதா..."

"ஓயெஸ்! கால்ஷியம் ரொம்ப நல்லது....நாளைக்குப் போடலாம்..."

"ஒரு கோர்ஸ், எத்தனை இன்ஷக்ஷன்..."

"ஆறு போடலாம்...உங்க உடம்புக்கு எட்டுக்கூட நல்லது..."

"நாளைக்கு அதுதான் செய்துகொள்ளவேணும்...இப்ப சாப்பிட ......"

"எது வேணுமானாலும் சாப்பிடலாம்...கொஞ்சம் கொஞ்சம்..."

"கொஞ்சம் கொஞ்சம் சாப்பிடாமல், படிபடியா சாப்பிடுவேன்... என்னை என்ன பத்ரகாளிபோல எண்ணிண்டு பேசறீள்........என் சிநேகிதிகள் என்னை பாரிஸ் ப்யூடின்னு கேலிசெய்வா..."

"கேலியா......செச்சே! பாரிஸில் இப்ப ஏது ப்யூடீஸ்...சரி......உங்களுக்குச் சளி ஏன் பிடிச்சது..."

"அதைக் கேட்கறிங்களா டாக்டர்! கேளுங்கோ, நன்னாக் கேளுங்கோ......ஆனா வாயைத் திறந்து பதில் சொல்லமாட்டா! இவ இருக்கிறா நாரும் நரம்புமா, இவ என்ன செய்யறா தெரியுமோ..."

"போடி அம்மா! அதை எல்லாம் அவரண்டை சொல்லணுமா...."

"வேறே யாரண்டை சொல்றது' உன்னோடே சேஷ்டையை......இப்ப படுத்துண்டயே, என் மனசு கேட்கறதா........எட்டு ஊசின்னா போடணும் என்கிறார் டாக்டர்... இவ இருக்கிறா டாக்டர் ஒத்தை நாடி......சமூக சேவைன்னு சொல்லிண்டு கிராமம் கிராமமா, சோறு தண்ணி இல்லாமல் சுத்தறது, சேறு கூட்டறதாம், சுண்ணாம்பு அரைக்கறதாம், கேட்டேளா, தோட்ட வேலைகூடச் செய்யறதாம் ...காத்தாலே இருந்து சாயரட்சை இருட்டற வரையில் இது,...ஜுரம் வராமலிருக்குமோ......இவ உடம்புக்கு ஆகுமோ, சுண்ணாம்பிலே கைபட்டா நல்லதோ, சொல்லுங்கோ..."

"ரொம்பத்தப்பு! ரொம்பத்தப்பு!"

"எது தப்பு டாக்டர்! ஏதோ ஏழை எளியவர்களுக்கு சேவை செய்யறது தப்பா...?"

"அதை யார் தப்புன்னு சொல்வா! நம்ம ஜவஹர்லால் கூடச் சொல்லியிருக்காரே, சமூக சேவை சிலாக்கியமானதுன்னு..."

"சமூக சேவைன்னு சொல்லிண்டு சேறு கூட்டறதும், சுண்ணாம்பு அரைக்கறதும்தான்வேலையா ......ஏன் டாக்டர், அந்த வேலைக்கு இவதானா ஆப்ட்டா! அதெல்லாம் வாட்டம் சாட்டமா, கட்டையா உள்ளவா செய்யவேண்டிய காரியம்........"

"ஆமா, இவங்க உடம்புக்கு ஒத்துவராது......சளி அதனாலே தான் பிடிச்சுது...ஆனாலும் பரவாயில்லை...கால்ஷியம் கொடுத்தால் போதும்......"

நீண்டநேரமாகிவிட்டதை பர்வதம் கவனப்படுத்தியான பிறகு, ஸ்டெதஸ்கோப்பை மறதியாக அங்கேயே வைத்துவிட்டு, டாக்டர் இரகுராமன், தன் நர்சிங்ஹோம் போய்ச் சேர்ந்தார்.

*

ஆறுவது இன்ஜக்ஷனுக்குப் பிறகுதான் டாக்டர் ஆராவமுதன், இது, 'பாராடைபாயிட்' ஜாக்ரதையாகக் கவனித்துகொள்ளவேணும் என்று சொன்னார் — சுந்தரம்மாவிடம் — டாக்டர் இரகுராமனின் தாயாரிடம்! சாருபாலா வீட்டிலிருந்து வந்ததும் 102!! பிறகு ஏறுகிறது இறங்குகிறது, நெருப்பாகக் காய்கிறது, மறுபடி வியர்க்கிறது, மீண்டும் ஏறுகிறது, இப்படி இரகுராமனுக்கு! கடைசியில் இது 'பாராடைபாயிட்" என்று டாக்டர் ஆராவமுதன் கூறினார்... நர்சிங்வேலையில் சாருபாலாவுக்குப் பழக்கமில்லை, ஆனால் அந்தப் பதினாறு நாட்களில், அவள் திறமையான 'நர்ஸ்' ஆகிவிட முடிந்தது, காதல் டோஸ் டோஸாகத் தரப்பட்டது—பார்வை, புன்னகை, பேச்சு, நெற்றியில் தைலம் தடவுதல், போர்வையை எடுத்துப் போர்த்துவிடுவது, ஜன்னலை இலேசாகத் திறப்பது, வேளா வேளைக்கு மருந்து தருவது, பிடிவாதமாக வாயைத் திறந்திடமறுத்தால், கன்னத்தைத் தடவி சிரிக்க வைத்து கஞ்சி கொடுப்பது—இப்படி, பாராடைபாயிட், மாதக் கணக்கில் இருக்கக் கூடாதா, இப்படிப்பட்ட மதுரமான வாழ்க்கைக்காகவாவது என்றுகூட டாக்டர் இரகுராமன் கருதினான்.

*

சமூகசேவகி சாருபாலாவுக்குத் தகுந்த வரன் பார்ப்பதையே முக்கியமான வேலையாகக் கொண்டிருந்த வேதாந்தாச்சாரி, கலியாணமாகாதிருந்த ஐ. ஏ. எஸ். அவ்வளவு பேருக்கும் கண்ணிவைத்தபடி இருந்தார்—எல்லாப் பறவைகளும் எப்படியோ தப்பிப் பறந்தபடி இருந்தன. சாருபாலா அவரைக் காண நேரிடும்போதெல்லாம் வேடிக்கையாகக் கேலியும் செய்வாள்.

"ஏண்டி! சாரு! உனக்கு 'நேவி' யிலே ஒரு ஆளைப் பார்க்கவா...... நேவியில்!"

"ஏன்! ஐ. ஏ. எஸ். பிடிக்கிற வேலை நடக்கவில்லை போலிருக்கு!',

"உன்னோடே ஜாதக பலன் அப்படி இருக்கு, சாரு! நான் என்ன செய்ய......நானும் என்னென்னமோ 'பிளான்' போட்டுப் போட்டுப் பார்க்கறேன், பலிக்கல்லே. ஆசாமி என்னமோ அழகாத்தான் இருக்கே! எனக்கோ வயசாயிடிச்சி ........"

"ஆனா என்னவாம்! தசரத மகாராஜன் கைகேயியைக் கலியாணம் செய்துகொண்டது அவருடைய வயோதிகப் பருவத்தில்தானே..."

"ஏண்டி சாரு! அவனைக் கைகேயி ஆட்டிப்படைச்சதுபோல என்னை நீ ஆட்டிப்படைக்க எண்ணமிட்டுவிட்டயோ..."

"ஆசையைப் பாரு, ஆசையை!"

இப்படி எல்லாம் இருவருக்கும் சரளமான பேச்சு நடக்கும். 'கோந்தை'யின் சமர்த்துக் கண்டு தாய் மகிழ்வதும், 'தோப்பனார்' 'சபாஷ்' போடுவதும் அந்தக் குடும்பத்தின் அலாதியான முறையாக இருந்து வந்தது.

"சாருவுக்கு அடிக்கடி ஏன் சளி ஜுரம் வர்ரது பாட்டி! நோக்கு என்னென்னமோ வைத்யமெல்லாம் தெரியுமே. ஏன் சாருவுக்கு ஜுரம் வராமப்படிக்குச் செய்யல்லே ..." என்று அடுத்தாத்து ஆண்டாள் கேட்பதுண்டு.

"ஏண்டி வராது சளி ஜுரம்! ஜுரத்தோடா போகும், கை கால் பிடிப்பு, கண்ணிலே மஞ்சள், குடல் வாதம், எல்லாம்தான் வரும், காலா காலத்திலே ஆகவேண்டிய காரியத்தைச் செய்யாமப்போனா, இதுதான் கதி. நேக்கு இவ வயதிலே, இரண்டு குழந்தைகள்! இவ, பாரேன், ஆட்டக் குதிரைமாதிரி ஆடிண்டு, என்னமோ சேவை செய்யப்போறேன்னு சொல்லிண்டு திரியறா, உடம்புக்கு வராமப் போகுமோ" என்று அனுபவ வைத்ய சிந்தாமணியான பாட்டி சொல்லிவிட்டு, "இவ மட்டுமா! இந்தக் காலத்துப் பெண்களே இப்படித்தான் இருக்கா..." என்று அங்கலாய்த்துக்கொள்வது வாடிக்கை.

சாரு, பலபேருக்குப் பெரும் பிரச்சினையாகி இருந்து வந்த திருமண விஷயத்தைத் தானே தீர்த்துவிடத் தீர்மானித்துவிட்ட

தாகக் காட்டுவதுபோல, டாக்டர் இரகுராமன் போட்டோவைத் தன் மேஜை மீது வைத்து 'ஜரிகை' மாலை போட்டு மகிழ்ந்தாள்.

*

ஆறு கிராமங்களிலே அரிய சேவை! பதினெட்டுத் திருக்குளங்களிலே பாசி எடுத்து, படிக்கட்டு களைச் சுத்தம் செய்து, இலட்சோப லட்சம் ஜனங்களுக்குச் சௌகரியம்! ஓலைக்கொத்து குடிசைகளில் இருந்துகொண்டு, சுத்தமாக சுகாதார முறைப்படி வாழத் தெரியாமல், மௌடிகத்திலே மூழ்கிக் கிடந்த ஜனங்களுக்கு இதோபதேசம்! கிராமத்துக் குழந்தைகளுக்குக் கோலாட்டம் டான்சு, ஆகியவைகளைக் கற்றுக்கொடுத்து பல கிராமங்களிலே ஆனந்தமான பொழுதுபோக்கு ஏற்பாடு செய்து தந்த பெருமை! இவ்வளவும் சாதித்தது யாருன்னு எண்ணிண்டிருக்கிேர். இதோ, சாட்சாத் ஜானகி போல, டாக்டர் இரகுராமன் பக்கத்தில் அமர்ந்திருக்கும் சாருபாலா தான் என்று சப்ஜட்ஜ் சபேச சாஸ்திரிகள் திருமண வாழ்த்து வைபவத்திலே கூறியபோது, 'கரகோஷம்' பலமாக எழும்பிற்று. திருமணம் அந்த வட்டாரத்து மக்களுக்கே கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கவர்னரின் வாழ்த்துச் செய்தியைக் கலெக்டர் படித்தார்! வியாபாரிகள் அனைவரும், வரிசை வரிசையாக நின்று, திருமணப் பரிசுகள் வழங்கினர்கள். வெள்ளியால் செய்து தங்கமுலாம் பூசப்பட்ட குடிசை, ஏர்கலப்பை, பரிசளித்துப் பாராட்டுதலைப் பெற்றார், பாரதசேவா சமாஜப் பரிபாலகர் பிரண தார்த்தி. நடனம் —சங்கீதம்— பொய்க்கால் குதிரை ஆட்டம்— பள்ளிச் சிறுமிகள் கோலாட்டம்— என்று வைபவம் பிரமாதமாக இருந்தது.

*

ஒரேசர் சமயம்தானே இப்படிப் பட்ட உல்லாசக் காட்சியைக் காண முடிகிறது! அதோ கொடிபோன்றிருக்கும் அந்தப் புது மணப் பெண்ணின் கூந்தலைக் கோதி நிற்கும் குமாரன் எவ்வளவு இன்பமாகப் பேசுகிறான். அவள் எவ்வளவு மயக்கும் பார்வையை வீசுகிறாள். தனியாகத்தானே இருக்கிறோம் என்று இந்த இளங்காதலர்கள், இப்படி விளையாடுகிறார்களே! அடே! அடே! எத்தனை தடவை தான், அந்த எழிலரசியை இழுத்திழுத்து மடியில் சாய்த்துக் கொள்வது! கொஞ்சம் கூட உனக்கு இரக்கம் காணேமே. அப்பப்பா! போதும்! போதும்! என்று அந்தப் பாவை கூறக் கூற, உஹூம்! உஹூம்! என்று கொஞ்சிக் கொஞ்சி அந்தக் கோவ்வை இதழைக் கொத்துகிறானே, இந்தக் கொடியவன்! அடபாதகா! இப்படியா இந்த இள மங்கையை இறுகத் தழுவிக்கொள்வது, மூச்சுவிட முடியாமல் திணறுகிறாளே அந்த மோகனங்கி, பைத்தியக்காரப் பெண்ணே! அவன் உன்னை இந்தப் பாடு படுத்துகிறான், நீ, கலகலவெனச் சிரிக்கிறாயே! பேதைப் பெண்ணே! ஆம்! அதுதான் சரி ...கண்களை மூடிக்கொண்டாயா,... நல்லது....உறங்கு... மெல்லமெல்ல உறங்கு...இன்ப நினைவுகள் உனக்குத் தாலாட்டாக அமைந்துவிட்ட நிலையல்லவா, இனி உறங்கு........ அட வெட்கமற்றவனே! என்னடா இது, அவளுடைய பாதத்தை வருடுகிறாயே! சேச்சே! ஆண் சிங்கம்! வீட்டின் தலைவன்! என்றெல்லாம் பெருமை பேசுகிறார்கள், இங்கு என்னடா என்றால், இவன், அவள் பணிக்காமுன்பு பாதம் வருடுகிறான்—பளிங்காலான பதுமைக்கு தங்கத்தகடு உடுத்தி வைத்திருக்கிறது என்று சொல்லும்படி இருக்கிறது இந்தக்காட்சி! இந்த வாலிபன், கைதேர்ந்த சிற்பி, தான் சமைத்த சிற்பத்தின் கலை அழகை இங்கும், அங்கும், எங்கும், கன்னத்திலும் நெற்றியிலும், கதலித் தொடையிலும் மின்னல் இடையிலும், கண்டு கண்டு பெருமிதம் கொள்வது போலல்லவா இருக்கிறான்! டாக்டராமே இவன்! உடற்கூறு தெரிந்தவன்! நோய்க்கு மருந்தளிக்க வேண்டியவன், இதோ நோயூட்டுகிறான்!....என்று கூறி ரசித்திடுவதுபோல, வெண்ணிலவு காட்சி அளித்தது. டாக்டர் இரகுராமன், அண்ணாந்து பார்த்தல்ல, மடியில் சாய்த்தும், பக்கத்தில் இருத்தியும், வெண்ணிலவு கண்டான்—அந்த நிலவை மறைத்திடும் கார்கிறக் கூந்தலை அவ்வப்பொழுது அப்புறம் தள்ளியபடி, களங்கமில்லா முகநிலவு கண்டு, ஏதோ பேசுகிறான்—என்னென்னமோ கேட்கிறான் — எதை எதையோ தருகிறேன் என்கிறான். அவள் புன்னகை பூத்த முகத்துடன், முடியாது! முடியாது! என்று கூறுவதுபோலத் தலையை அசைக்கிறாள், அவனே, அவள் மனம் பாகாய் உருகத்தக்க ஒரு பரிதாபப் பார்வையால் அவளை ஒரு கணத்திலே வெல்கிறான்!

நாள் தோறும் களம் — இன்று சாரு, நாளை இரகுராமன், வெற்றி பெறுவது என்று இருக்கிறது காமக் களியாட்டக் களத்தில். நித்த நித்தம் இந்தக் காதலரின் இன்ப விளையாட்டைக் கண்டு கண்டு மெலிந்து மெலிந்து நிலவும்

## சுடச்சுட!

—:—

பர்மா, 'இந்தியா'வுக்குத் தர வேண்டி இருந்த கடன் தொகை, 40கோடி.

நீண்டகாலமாக இதற்கு 'வட்டி, செலுத்தாமலிருந்துவந்ததால்,வட்டித்தொகை 20கோடியாக வளர்ந்தது.

நேருபண்டிதரின் சர்க்கார், இந்த 20கோடி வட்டியைத் தள்ளிக் கொடுத்துவிட்டது.

அதுமட்டுமல்ல, யுத்தத்தின் காரணமாக சொத்துகள் பெரும் அளவில் சேதமான காரணத்தால் பர்மா மிகவும் நொந்துபோயிருப்பது கண்டு, மனம் இளகி, கடன் தொகையைக்கூட, சரிபாதிதள்ளிக் கொடுக்க நேரு ஒத்துக்கொண்டு விட்டார்.

ஆக, 60கோடி வரவேண்டிய இடத்திலிருந்து 20கோடி கிடைத்தால் போதுமென்று கூறப்பட்டாகிவிட்டது.

இதுமட்டுமா! வாங்குவதற்கு யாரும் இல்லாததால், பர்மா, ஏராளமாக அரிசியைக்குவித்து வைத்துக்கொண்டு ஏங்கித்தவித்துக் கொண்டிருந்தபோது நல்ல விலைக்கு, நேரு, 900,000டன் அரிசியை வாங்கினார்!!

நேருபண்டிதருக்கு பர்மாவில் இராஜோபசாரம் கிடைப்பதிலே ஆச்சரியம் என்ன!!

இவ்வளவு சலுகைபெற்ற பர்மா, 'சுடச்சுட' நன்றி தெரிவித்து மிருக்கிறது.

முன்பெல்லாம், பர்மாவில் உள்ள 'இந்தியர்' மாதம் 40-ரூபாய் அளவில் தாயகத்துக்கு அனுப்பலாம் என்று திட்டம் இருந்தது.

இப்போது, பர்மாசட்டம் இயற்றி இருக்கிறது, இனி மாதம் முப்பது ரூபாய் அளவுக்குமேல், பர்மாவிலிருந்து 'இந்தியா'வுக்கு அனுப்பக் கூடாது என்று.

ஜெய்ஹிந்!!

தேய்ந்தது! நிலவு தேய்ந்தால் என்ன! அவன்தான் அவனுக்கென்று ஒரு முழு நிலவு பெற்றுவிட்டானே! அவன் அந்தக் குளிர் மதிப் பார்வையில் தன்னை மறந்திருந்தான், கட்டழகி கிடைத்துவிட்டாள் என்பதால் கடமையை அடியோடு மறந்துவிட்டானே இவன் என்று கோபத்தால், கண்களை இறுக மூடிக்கொள்வது போன்ற நிலையை நிலவு அடைந்தது. வான விளக்கு அடியோடு அணைந்தது, இவன் இதயச் சுடரொளியோ கொழுந்துவிட்டெரிந்த வண்ணம் இருந்தது. சாருபாலா இரகுராமன் காதல் வாழ்க்கை, அரும்பி, போதாகி மலர்ந்தது.

✱

"சாரு! இதென்ன வடு?" என்று டாக்டர் இரகுராமன் கேட்டான்.

"ரொம்ப போக்கிரிதான் நீங்கள்! செய்வதைச் செய்துவிட்டு கேலி வேறு செய்கிறீர்கள்" என்று கோபித்துக்கொண்டாள் சாரு. கோபம் என்றால் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகம் என்று பொருள் அல்ல, இடம் தெரிகிறதல்லவா, அந்த இடத்துக் கோபம்!!

"கன்னம்! கன்னம்! என்று அந்த அஞ்சுகம் அஞ்சி அஞ்சிச் சொல்லச் சொல்ல அந்த அக்ரமக்காரன் கொஞ்சிப் பேசிப்பேசி, 'வடு' உண்டாக்கி விட்டிருந்தான் முன்னிரவு! மறுநாள் மாலை, அவனே, ஏதுமறியாதான் போல இந்த வடு ஏன் ஏற்பட்டது என்று கேட்டால், கோபம் வராமலா இருக்கும். அவள் கன்னத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்ட போதுதான் டாக்டர் இரகுராமனுக்கு, அந்த நினைவு வந்தது. அவன் கேட்டது, அவள் தலை 'வகுட்டில்' இந்த ஒரு சிறு 'வடு'வைப்பற்றி! அதை அவள் பிறகு விளக்கினாள்!

"இதுவா! சமூக சேவையின் பரிசு"

"பரிசா?"

"ஆமாம்! ஏமூரில், ஒரு குடிசையின் மேற்கூரையைத் தாங்கிக் கொண்டிருந்த இடத்தின் சுவர் கலனாகிக்கிடந்தது — அந்த 'அப்பாவி' அதைக் கவனிக்காமல் இருந்தான். நான்தான் அதைக் கண்டுபிடித்து, புதிதாகச் 'சாந்து' பூசினேன்—அப்போது, ஒரு மரக் கட்டை தலையில் பட்டது, அந்த 'வடு'தான்—சமூக சேவையின் போது கிடைத்த பரிசு" என்று சாரு சொன்னாள்.

"இரத்தம் நிரம்பக் கசிந்ததா சாரு! இந்த வேலையெல்லாம் ரொம்ப ஜாக்ரதையாகச் செய்ய வேண்டும். மடையன், உன் தலையில் 'கட்டை' விழுந்தபோது சும்மாவா இருந்தான்" என்று கேட்டார் டாக்டர்.

"சார்! சார்!" என்ற குரல்கேட்டது. கம்பவுண்டர் குண்டப்பன் எப்போதும் இப்படித்தான், 'சிவ பூஜைக்கரடி' என்று மனதிலே எண்ணிக்கொண்டு, டாக்டர் இரகுராமன், கீழேசென்றான்.

"சாமியோய்! ஒரே கொழந்தை தாங்க.....கொலக்கொடி......தவமாத்தவமிருந்து பெத்ததுங்க.........இந்த அநியாயத்தைப் பாருங்கசாமி...... என் வயித்திலே பால் வாருங்க டாக்டர்..........." என்று அழுது கொண்டே கூறினான், பட்டிக்காட்டான்—அவன் அங்கொரு பெஞ்சில் படுக்கவைத்திருந்த நாலுவயதுக் குழந்தையின் மண்டை நொறுங்கி, இரத்தம் குழைந்து கொண்டிருந்தது; ஆபத்தான நிலைமை.

டாக்டர்இரகுராமன்குழந்தையின் கோரமான நிலைமையைக்கண்டு, உள்ளபடி பச்சாதாபப்பட்டான். கம்பவுண்டர், குழந்தைக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைக்குத் தேவையான ஏற்பாடுகளில் ஈடுபட்டான்.

"ஏன் இப்படி? என்னநடந்தது?"

"கொழந்தை படுத்துத் தூங்கிக் கொண்டிருந்ததுங்க டாக்டர்! என் போறுதவேளை, கூரைப்பக்கமிருந்து, சுவர் வெடித்து ஒரு பாளம் விழுந்தது கொழந்தை தலை மீது"


"மடையர்களாடா நீங்கள்! பாளம் விழும்போது, என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?"

"பால் கறந்துகொண்டிருந்தேன் டாக்டர்! கொழந்தை'கோ'ன்னுகூச்சல் போட்டதும் தோட்டத்திலே இருந்து ஓடிவந்தா, கொழத்தை இந்தக் கோரமாக இருந்தது, அவ, என்வூட்டுக்காரி வெளியே போயிருந்தா......"

"சுவர், எப்படிடா வெடித்து பாளம் விழுந்தது......ஏன் அப்படிப்பட்ட ஆபத்தான நிலையிலே சுவர் இருக்க விட்டுவைத்தே..."

"அதை ஏன் டாக்டர் கேட்கறிங்க. என்னமோ வீடு ரிப்பேர் செய்கிறோம், காசு செலவில்லாமேன்னு சொல்லிகிட்டு, வந்தாங்க பட்டணத்துப் பொம்பளைங்க. வேண்டாம்மா, எங்களுக்குக் காசு கிடைச்சா, நாங்களே செய்துகிடுவோம், எங்களுக்குத்தான் எப்படிச் செய்யறதுன்னு தெரியும், நீங்க அதை எல்லாம் என்னத்தைக்கண்டீங்கன்னு, எவ்வளவோ எடுத்துச் சொன்னேனுங்க. ஒரு துடுக்குக் காரப்பொண்ணு, டே! நாங்க உதவி செய்யவந்தா தடுக்கறயா நீ, நாங்களெல்லாம் யார் தெரியுமா? சர்க்காரோட ஆளுங்க! சம்பளம் வாங்காம வேலைசெய்யிறவங்க! எங்களைத் தடுத்தே, அவ்வளவுதான், உன்னைப் போலிசிலே சொல்லி தண்டனை வாங்கித் தருவோம்னு மிரட்டிச்சி. உங்களுக்கு ஏம்மா இந்த வேலையெல்லாம்! உங்களோட பங்களா, தோட்டம், காடு, கழனி, இங்கெல்லாம் வேலைசெய்யறதுக்கே, எங்களாட்டம் ஆளுங்க தானே தேவைப்படுது. நீங்க என்னமோ, கொல்லன் தெருவிலே ஊசி விக்கறமாதிரி, எங்க இடத்திலே எங்கவேலையைச் செய்ய வருகிறிங்க, நல்லா இல்லேம்மான்னு நல்லதனமாச் சொன்னேன். அதட்டிப் பேசின பொண்ணு, உடனே சிரிச்சிப்பேச ஆரம்பிச்சி, "பெரியவரே! நாங்க எப்படியும் முப்பது குடிசையை சீர்திருத்தம் செய்யணும், எங்க சங்கத்தோட திட்டம் அது, தடை சொல்லாதே"ன்னு கேட்டுகிட்டு, சேறுகொண்டா, சுண்ணாம்பு எடு, கல் எடு, அப்படி இப்படின்னு சொல்லி, நல்லா இருந்த சுவரைச் 'சாந்து' பூசறேன்னு சொல்லி, கெடுத்துவைத்துட்டுதுங்க; நாலு நாளைக்கு முன்னே மழை வந்துதுங்களா, அவ்வளவுதான், பூச்சு வேலை கரைஞ்சுபோச்சி, பாளம் விழுந்து என் கொழந்தை இந்தக் கதியாச்சி" என்றான். கம்பவுண்டர், டாக்டரைத் தனியாக அழைத்து, ஏதோ இரகசியமாகச் சொன்னான். டாக்டர் முகத்தில் ஈயாடவில்லை. கம்பவுண்டர், கிராமத்தானைப்பார்த்து, "குழந்தையை பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போ! இங்கே ஒண்ணும் செய்வதற்கில்லை" என்று கூறிவிட்டான். ஐயோ தெய்வமே! என்று அலறியபடி, குழந்தையை வாரி எடுத்தான் கிராமத்தான்; வாழைத்தண்டு போல ஜில்லிட்டுக் கிடந்தது. ★

# "எங்கள் நாடு!"



**தம்பி,**

"எங்கள் நாடு!
இது எங்கள் நாடு!
எங்கும் புகழ் தங்கும் நாடு
வளம் பொங்கும் நாடு
வந்த எல்லார்க்கும்
இடம் கொடுத்து
ஏமாந்த நாடு!!"

கவர்னர், சேலம் மாவட்டத்தில் ஒரு சிற்றூரில் இந்தப் பாட்டுக் கேட்டாராம்! பள்ளிச் சிறுமிகள் இந்தப் பாட்டுப் பாடி, அதற்குத் தகுந்த நாட்டியமாடிக் காட்டினராம். தம்பி, கவர்னர் நல்ல கலா ரசிகர்! திருவல்லிக்கேணி, மயிலை, அடையாறு, இவைகள், நமது நாட்டுப் பண்பாடு இன்னதென்று அறியாத வெள்ளைக்காரர்களுக்கே 'கலாரசனை' ஊட்டின என்றால், நமது கவர்னருக்கு அதை ஊட்டச் சிரமம் என்ன ஏற்பட்டிருக்கப் போகிறது. அவரும் கலா நிகழ்ச்சிகளிலே அடிக்கடி கலந்துகொள்கிறார். எனவே, பள்ளிச் சிறுமிகள் பாடி ஆடியபோது, அவர் அரும்பும்–மணம் தருகிறது என்றெண்ணி இருக்கக்கூடும், கலை, கடற்காற்று வீசும் இடங்களிலே மட்டுமல்ல, சிற்றூர்களிலும் சிறப்புடன் விளங்க முடியும் என்று எண்ணி மகிழ்ந்திருப்பார். கலைவளர்ச்சிக்கு இந்தச் சிறுசுகளின் சிங்கார நடனம் ஒரு எடுத்துக்காட்டு என்பதுபற்றிக் கவர்னர் எண்ணிக் கொண்டிருந்திருப்பாரே தவிர, அந்தப் பாட்டின் பொருள் பற்றி அவர் சிந்தனையைச் செலவிட்டிருக்கமாட்டார்; பொருள் தெரிந்த சிலரும், எங்கே இந்தப் பாடலின் பொருள் கவர்னர் பெருமானுக்குத் தெரிந்துவிடுகிறதோ என்று தான் கவலைப்பட்டிருப்பார்களே தவிர, பொருளை விளக்கி இருக்கமாட்டார்கள்.

எல்லா வளமும் பொங்கிடும் எழில் நாடு, எங்கள் தமிழ் நாடு! ஆனால் யாராரோ வந்தார்கள், வந்தவர்களுக்கெல்லாம் இடம் கொடுத்துக் கொடுத்து, ஏமாந்த நாடு இது என்று, இரக்கமும் வெட்கமும் எழத்தக்கவிதமான பொருள் கொண்ட பாடல் அது, 'ஓர் இரவு' எனும் படக் காட்சியில் இருப்பது; பாடலைத் தீட்டியவர் முத்தமிழ்க் கலா வித்வரத்ன டி. கே. சண்முகம் அவர்கள். அவர்கூட, இன்றைய நிலையில், விரும்பமாட்டார் என்று எண்ணுகிறேன், இப்படிப்பட்ட கருத்தமைந்த பாடலைத் தீட்டியவர் என்பதை வெளியேஎடுத்துரைக்க. நிச்சயமாகக் கவர்னருக்குப் பொருள் எடுத்துரைக்கப்பட்டிருந்தால், அவர் கலையைக்கூடக் கண்டித்துவிட்டுப் போயிருப்பார்! கலையை, கவர்னர்கள், கண்ணுக்குக் குளிர்ச்சியும், காதுக்கு விறுவிறுப்பும், இதயத்துக்கு இன்பமும், நரம்புக்கு முறுக்கும், இரத்தத்துக்குச் சிறிதளவு சூடும் தருவதற்கான சாதனமாகக்கொள்ள விரும்புவார்களே யன்றி, வேறு வகையாகப் புகுத்துவது கடினம் என்று சொல்லத்தக்க கருத்துக்களை, கலைமூலம் புகுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் கொள்வார்கள்! செச்சே! கவர்னர்களுக்கு என்ன 'விதியா' இப்படி அல்லற்பட! ஆனந்தமாக வாழ, அவர்கள் அரும்பாடுபட்டு, அரசர்களையும், அரசாண்ட ஆங்கிலேயரையும் விரட்டி அடித்து அரண்மனைகளைக் கைப்பற்றிக்கொண்டு, அறுவடை கண்டு அகமகிழ்கிறார்கள்—அந்த நிலையில் உள்ளவர்களிடம், மக்களின் உள நிலையை மாற்றக் கலை பயன்படவேண்டும் என்று சொன்னால், நிச்சயமாகக் கோபிப்பர்.

கவர்னர்கள் உணர மறுப்பர், கவிதை தீட்டியோரும் அக்கருத்தினை வலியுறுத்திக்கூற விரும்பார், பள்ளியின், பொறுப்பாளர்களும், பாடலின் பொருள் அறிந்தல்ல அதைத் தேர்ந்தெடுத்தது — ஆனால், தம்பி, நமக்கெல்லாம், அந்தச் செய்தியைப் பார்க்கும்போது, "என்ன பொருத்தம்! என்ன பொருத்தம்! வந்த எல்லார்க்கும் இடம் கொடுத்து ஏமாந்த நாடு! என்ற பாடலை, வந்தமர்ந்து கோலோச்சும் கவர்னர் எதிரே பாடிக்காட்டினரே, எவ்வளவு அருமை! எத்துணைத் திறமை!" என்று எண்ணிப் பூரித்திடச் செய்கிறது.

வளமிருந்தும், எழில் நிரம்பியும், வரலாற்றுச் சுவடியில் நல்லிடம் பெற்றும் உள்ள நம்நாடு, வந்த எல்லார்க்கும் இடம்கொடுத்து ஏமாந்த நாடு—என்ற உண்மையை மட்டும், நாட்டின் பிரச்சினைகளிலே நல்லார்வம் காட்டும் இளைஞர்கள் உணர்ந்துகொண்டு விடுவார்களானால்...! தேனென இனிக்கிறது. தம்பி, நாம் செய்ய வேண்டிய பணி, இதுநாள் வரை இதனை உணராதிருப்பவரெல்லாம், இந்த உண்மையை உணரச் செய்வதுதான்! ஓரளவுக்கு நமது முயற்சி வெற்றி பெற்றுக்கொண்டு வருகிறது — இல்லையானால், ஏமாற்றமும் மனச்சோர்வும் நம்மை எல்லாம் மண்ணாக்கிவிட்டிருக்குமே, நமது முயற்சி வெற்றி பெறுவது கண்டு மனம் புழுங்குவோர், நமது மூக்கினைச் சொரிந்துவிடவும், தமது நாக்கினைத் தீட்டிக்கொண்டு நம்மை நிந்திக்கவும் முற்படுகிறார்

களல்லவா! தம்பி, நாம் வெற்றி பெற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதற்கு அறிகுறிகள் அவை.

நம் நாடு — திரு இடம்—இன்று 'வடவருக்கு' பல்வேறு துறைகளிலும் அடிமைப்பட்டுக் கிடக்கிறது, என்ற பொது உண்மையை நாட்டவரில் மிகப் பெரும் அளவினர் உணர்ந்து கொண்டுவிட்டனர்; சிலர் திகைப் புற்றுக்கிடக்கின்றனர்; வேறுசிலர் இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளாமலிருக்கும் வரையில் மனதுக்கு அமைதி இருக்கும், பிறகு புயலல்லவா புகும், நமக்கேன் வீண்வேலை என்று ஒதுங்கிக் கொள்கிறார்கள்; ஆர்வமுள்ளவர்களோ, அடிமைத்தனத்தின் பொருளைக் கண்டறிந்து விளக்கும் அரும் பணியில் ஈடுபட்டபடி உள்ளனர். ஒரு தம்பி, இதை எனக்கு அனுப்பி, வடநாட்டு ஆதிக்கம் எப்படி எப்படி வடிவமெடுத்திருக்கிறது பார், அண்ணா! என்று கூறுகிறார்.

"இந்திய உபகண்டத்தின் பெருமளவு உற்பத்தியில் ஓரளவு பெரிய பங்கு பெற்றிருப்பது காகிதத் தொழிலாகும். காகிதத் தொழிலின் முடிசூடாமன்னர்களாக இன்றைய நிலையில் காணப்படுவது—ஆளுகை நடத்துவது வடநாட்டு பெருமுதலாளிகளே.

இந்தியாவின் வட பகுதியில்:-

1. ரத்லம் ஸ்ட்ராபோர்டு மில்ஸ்
2. டிடாகூர் பேப்பர் மில்ஸ்
3. பெங்கால் பேப்பர் மில்ஸ்
4. இந்தியா பல்ப் பேப்பர் மில்ஸ்
5. ஸ்ரீகோபால் பேப்பர் மில்ஸ்
6. பெல்லாரி பேப்பர் மில்ஸ்
7. ஸ்டார் பேப்பர் மில்ஸ்
8. ஒரியண்ட் பேப்பர் மில்ஸ்
9. ரோட்டாஸ் இண்டஸ்டிரீஸ்
10. இந்தியா பேப்பர் மில்ஸ்
11. போபால் ஸ்ட்ராபோர்டு மில்ஸ்
12. குஜராத் பேப்பர் மில்ஸ்
13. அர்விந்த் பேப்பர் ஸ்ட்ரா போர்டு மில்ஸ்
14. * டெக்கான் பேப்பர் மில்ஸ்
15. * சிர்பூர் பேப்பர் மில்ஸ் லிமி
16. * ஆந்திர பேப்பர் மில்ஸ்
17. * மைசூர் பேப்பர் மில்ஸ்
18. * காவேரி பேப்பர் மில்ஸ்
19. * புனலூர் பேப்பர் மில்ஸ்

இன்னும் பெயர் குறிக்க முடியாத வெகு சிறிய 4-அல்லது 5-காகித ஆலைகள் இந்திய நாட்டில் உள்ளன. ஆகமொத்தம் உள்ள 23-ஆலைகளில் 4-தென்னகத்தில் உள்ளன. ஒன்று தக்காணத்தில் உள்ளது.

தென்னகத்தில் உள்ள ஆலைகளில் ஒன்று செயல்படுவது கிடையாது. மீதமுள்ள மூன்று ஆலைகளில் ஒன்று அரசாங்கத்துக்கு சேர்ந்தது — ஒன்று அரசாங்கத்தின் ஓரளவு மேற்பார்வையில் திறம்பட நடந்துவருகிறது — ஒன்று ஆங்கில முதலாளிகளுக்குச் சேர்ந்தது. தென்னக ஆலைகள் மூன்றும்—ஆந்திரத்தில் ஒன்றும்—கன்னடத்தில் ஒன்றும் — மலையாளம் (திருவாங்கூர்—கொச்சியில்) ஒன்றுமாக — தமிழகத்தில் ஏதுமில்லாமல் வியாபித்தும் இருக்கின்றன.

ஆலைகள்தான் இல்லையென்றாலும் கூட ஆலைகளின் "ஏஜண்டுகளாவது" தமிழர்களாக உண்டா என்றால் அதுவும் கிடையாது.

கண்ணாடிக் காகிதம் தயார் செய்யும் ஒரேயொரு ஆலைமட்டும் தமிழர்களின் சொத்தாக திருவாங்கூர் —கொச்சியில் செயல்பட்டு வருகிறது—அதுவும் கூட தமிழக தேவைக்கு சிறிதுகூட "சப்ளை" செய்யமுடியாத நிலையில் வடநாட்டுக்கே பெருமளவு கட்டுப்பட்டு தொழில்படவேண்டிய நிலையில் இருப்பதாக சொல்லப்பட்டு வருகிறது. எனவே அது தமிழகத்தைப் பொருத்தவகையில் இருந்தும் இராததாகவேதான் உள்ளது.

குறிப்பாக, 'அங்கிகரிக்கப்பட்ட விற்பனையாளர்'களின் பட்டியலை நோக்குவோம்.

1. இந்திய நாட்டின் மிகப்பெரிய காகித ஆலைகளில் பெரியதான டிடாகூர் பேப்பர் மில்ஸுக்கு அங்கிகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் 'சௌத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்'

2. ரத்லம் ஸ்ட்ராபோர்டு மில்ஸ்: லாலா கோபி கிருஷ்ண கோகுல் தாஸ்.

3. பெங்கால் பேப்பர் மில்ஸ் லிமிடெட்: வில்சன் அண்டு கோ லிமிடெட், முன்னர் விற்பனையாளர்களாகச் சொல்லப்பட்டு வந்தனர்.

4. இந்திய பல்ப் பேப்பர் மில்ஸ் லிமிடெட்: பேரி அண்டு கோ லிமிடெட்.

5. ஸ்ரீ கோபால் பேப்பர் மில்ஸ்: பெல்லார்பூர் ஜெய்தயாள் கபூர்.

6. ஸ்டார் பேப்பர் மில்ஸ்:

7. ஓரியண்ட் பேப்பர் மில்ஸ் லிமிடெட்: பிரிமியர் சப்ளையர்ஸ் லிமிடெட், ஈஸ்ட் அண்டு வெஸ்ட் டிரேடிங் கம்பெனி, ஜெ. பி. அத்வானி அண்டு கோ லிமிடெட்.

8. ரோட்டிஸ் இண்டஸ்டிரீஸ் லிமிடெட்: யாலா கோபி கிருஷ்ண கோகுல்தாஸ்.

9. இந்தியா பேப்பர் மில்ஸ்.

10. போபால்ஸ்ட்ராபோர்டுமில்ஸ்: பரசுராம் ஜெதானந்த்.

11. குஜராத் பேப்பர் மில்ஸ்: ஜெ. தடானி அண்டுகோ லிமிடெட்.

12. அர்விந்த் ஸ்ட்ரா போர்டு: எ. எம். ஆறுமுகம்.

13. டெக்கான் பேப்பர் மில்ஸ் லிமிடெட்

14. சிர்பூர் பேப்பர் மில்ஸ் லிமிடெட்: பிரிமியர் சப்ளையர்ஸ் லிமிடெட்.

15. ஆந்திரா பேப்பர் மில்ஸ்: டி. என். கங்கப்பா.

16. மைசூர் பேப்பர் மில்ஸ் லிமிடெட்.

17. காவேரி பேப்பர் மில்ஸ் லிமிடெட்.

18. புனலூர் பேப்பர் மில்ஸ் லிமிடெட்: W. A. பியர்ட்செல் அண்டு கோ லிமிடெட்.

கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களின் பட்டியலை நன்றாகக் கவனித்து வாருங்கள். ஏறக்குறைய 24/25 ஆலைகளின் பூரண விற்பனையாளர்களாக வடநாட்டார்களாகவும், ஒரு சிலவற்றிற்கு அன்னிய நாட்டினருமே விற்பனையாளர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, தென்னாட்டின் காகித வாணிபம் அனைத்தும் வடநாட்டினரின் கைக்குள் அடக்கப்பட்டு, தென்னாட்டுக் காகித வாணிபம் அனைத்தும் 'எடுப்பார் கைப்பிள்ளை' யின் நிலையை ஒத்ததாக அமைக்கப்பட்டுவிட்டது — பரிதாபத்துக்குரிய செய்தி.

அவர்களின் சுண்டுவிரல் அசைந்தால், தென்னாட்டுக் காகித வாணிப மன்னர்கள் அனைவரும் மண்ணோடு மண்ணாக ஆக்கப்பட்டு விடுவார்கள் என்பது திடுக்கிடும் செய்தியேயானாலும், உண்மையானதே. மறுக்கமுடியாத, பரிதாபத்துக்குரிய நிலை, அழிக்கப்படவேண்டிய நிலை என்றைக்கு வருமோ, அன்றேதான் நம வாழ்வு விடியும். அந்நாள் எந்நாளோ"

*

வாழ்வு விடியவேண்டும்! அந்நாள் எந்நாளோ!—என்று ஏக்கத்துடன், இந்தக் கோவைத் தம்பி குமுறுகிறார் — 'காகிதம்' மட்டும்தான் இங்கு கவனிக்கப்பட்டது—இதற்கேகூட, இந்த ஏக்கக் குரல் கிளம்பிக் கொண்டிருக்கும்போதே ஒரு எக்காளம் கேட்கிறது—வடக்கே, மற்றோர் புதிய காகித ஆலை துவக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி வெளிவந்திருக்கிறது.

காகித ஆலைகள் சம்பந்தப்பட்ட மட்டும்தானா இது? இல்லை, இல்லை! எந்தத் தொழிலிலும், வடநாடுதான் ஆதிக்கம் செய்கிறது—சர்க்கார் திட்டம் எந்தத் திட்டமும் மேலும் மேலும் வடநாட்டைக் கொழுக்கச் செய்வதாகத்தான் இருக்கிறது — சர்க்காரே வடநாடுதானே! இந்தியா ஒரே தேசம் என்ற கண்ணோட்டம் வேண்டும்; வடக்கு, தெற்கு என்று பிரிப்பது தவறு, தீது, அறிவீனம் என்று பேசுவதால், 'மேதை'ப் பட்டம் கிடைத்துவிடும் என்று கருதுபவர்கள் இருக்கிறார்கள் — ஆனால் அவர்களின் தொகையும் குறைகிறது, அவர்களிடம் மக்களுக்கு அருவருப்பும் வளருகிறது!

வடநாட்டு முதலாளி — தென்னாட்டு முதலாளி என்று ஒரு பாகுபாடு உண்டா! மதியிலிகாள்! மார்க்சின் சித்தாந்தத்தை அறியாத வகுப்புவாத வெறியர்காள்! ஏழை எங்கும் வதைபடுகிறான். வடக்காக இருந்தால் என்ன, தெற்கு ஆனால் என்ன, வடக்கேயும் வறுமை வாட்டுகிறது, இல்லாமை, போதாமை கொட்டுகிறது! —என்று பேசுகின்றனர் கம்யூனிஸ்டுகள்! காங்கிரஸ்காரர்களைவிடக் காரசாரமாகப்பேசி, வடநாட்டுக்குக் கங்காணி வேலை பார்க்கும் இந்தக் கம்யூனிஸ்டுகளின் வாயும் அடைபடும் விதமாக நிலைமை வளர்ந்து விட்டிருக்கிறது. வடநாடு—தென்னாடு என்று பேசுவது வர்க்கப் போராட்ட சித்தாந்தத்துக்கு உகந்ததல்ல என்று பேசி வந்தவர்கள், இன்று, நாடு மெள்ள மெள்ள, ஆனால் உறுதியுடன் போர்க்கோலம் கொள்வதையும், நாட்டை வடவருக்குக் காட்டிக் கொடுப்பவர்களைக் கயவர் என்று கண்டித்து அவர்தம் கருத்தினைக் கருக்கிடவும் பிடியினை நொருக்கிடவும் துடிதுடித்துக் கொண்டிருப்பதையும் கண்டு, கிலிகொண்டு, பொதுமக்களின் சீற்றத்தால் சின்னாபின்னமாக்கப்பட்டுவிடுவோம் என்று அஞ்சி, இப்போது, தென்னாட்டுக்குத் தொழிற்சாலைகள் வேண்டும், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை வேண்டும், நெய்வேலி நிலக்கரியை வெளியே கொண்டுவந்தாக வேண்டும், என்று 'முழக்கம்' கிளப்ப முன்வருகிறார்கள். உள்ள, இரும்புத் தொழிற்சாலைகள் போதாது, மேலும் ஒன்று வேண்டும், அது சிந்துநதி தீரத்திலோ சிராளாவிலோ, அசாமிலோ, அமிர்தசரசிலோ, எங்கே அமைக்கிறீர்கள் என்பதுபற்றி எமக்குக் கவலை இல்லை, நாங்கள் அத்தகைய குறுகிய மனப் போக்கினரல்ல, எமது கண்ணோட்டம் பரந்து, விரிந்து இருப்பது, எமக்கு வடக்கும் கிடையாது தெற்கும் கிடையாது, என்று பேசுவது, மிக விரைவில், சிந்து வாரற்றுப் போகும் நிலையைத் தந்துவிடும் என்று கிலிகொண்டு, சேலத்து இரும்பு, நெய்வேலி நிலக்கரி, என்று பேசுகிறார்கள்—எங்களைக் "காட்டிக்கொடுப்பவர்கள்"—"கயவர்கள்" "கங்காணிகள்" என்று கண்டித்து எதிர்த்தொழித்திடக் கிளம்பிவிடாதீர்கள், நாங்களும், சேலம், நெய்வேலி, இவை சார்பாக வாதாடுகிறோம் என்று கூறி, பல்லிளிக்கத் தொடங்கிவிட்டனர்!

*

ஜனாப் ஜின்னா, பாகிஸ்தான் பரணி பாடியபோது, காங்கிரஸ்காரர்களைவிடக் கடுமையாகத் தாக்கினார்கள், கம்யூனிஸ்டுகள். நாடு துண்டாடப்படவிடமாட்டோம் என்று முழக்கமிட்டனர். பிரிவினை எதிர்ப்பு நாள்—மாநாடு — மகஜர்—வெகுஜன எதிர்ப்பு—பொதுஜன அணிவகுப்பு — என்றெல்லாம் பலப்பல அதிர்வேட்டுகள் கிளப்பினர். 'ஆணைப்பட்ட காந்தியாரும்' அதி வீரதீரர் படேலும், அலகாபாத் பண்டிதரும், பஞ்ச தந்திரம் தெரிந்த ஆச்சாரியாரும் கிளப்பிய எதிர்ப்புகளை முறிய ஆரம்பித்தன —அவர்களே ஜின்னாவின் 'முகவாய்க்கட்டை'யைப் பிடித்துக் கொண்டு கெஞ்சும் நிலை பிறந்தது —ஏதேது கப்பல் கவிழ்ந்துவிடும் போலிருக்கிறது என்று தெரிந்ததும், கம்யூனிஸ்டுகள் தங்கள் போக்கை அவசர அவசரமாக மாற்றிக்கொண்டு, பாகிஸ்தானுக்கு ஆதரவு தரத்தக்க தீர்மானத்தை நிறைவேற்றிக் காட்டினர்! எங்களை ஒன்றும் செய்துவிடவேண்டாம் என்று கெஞ்சுகிற தீர்மானமாக இருந்தது. பத்திரிகை நிருபர்கள் ஜனாப் ஜின்னாவைக் கண்டு, கம்யூனிஸ்டு தீர்மானத்தை எடுத்துக் காட்டி, அவர் கருத்தைக் கேட்டனர்; அவர் சொன்னார், "பாகிஸ்தான் திட்டத்துக்கு ஆதரவு திரண்டு வராதிருந்த கட்டத்தில், அதன் நியாயத்தை இந்த யோக்கியர்கள் மதித்து ஏற்றுக்கொண்டிருந்தால், நான் இந்தக் கம்யூனிஸ்டுகளுக்கு நன்றி செலுத்தி இருப்பேன்! என் திட்டத்தை விளக்கமறியாத மூஸ்லீம்களும், வீம்புக்காரக் காங்கிரசாரும் எதிர்த்தபோது, கம்யூனிஸ்டுகள் அவர்களோடு சேர்ந்துகொண்டு என்மீது கல் வீசினர். இப்போது, பாகிஸ்தான் பெறப்போவது உறுதி என்ற கட்டம் பிறந்துவிட்டது. இப்போது இவர்கள் பாகிஸ்தானுக்கு ஆதரவுத் தீர்மானம் போட்டு என்ன எதிர்பார்க்கிறார்கள்! என்னுடைய நன்றியையா! பைத்யக்காரர்கள்! அவர்களுக்கு இப்போதாவது தெளிவும் யூகமும் ஏற்பட்டதே என்று மகிழ்ச்சி அடைகிறேன் — அதுவே தவிர என் நன்றிக்கு அவர்கள் உரியவர்களல்ல" என்றுகூறினார். சுருண்டு கீழே விழுந்த அந்தச் சூரர்கள், மறுபடியும் எழுந்து அவர் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை, அவ்வளவு பலமான அடி விழுந்தது. அதே போக்கிலேதான், திராவிட நாடு விஷயமாகவும், கம்யூனிஸ்டுகள் கையாண்டு வருகிறார்கள். வடக்காவது தெற்காவது என்று 'பாரதம்' பேசி வந்தவர்கள் இப்போது தெற்கிலேயும் தொழில் வளரவேண்டும் என்று பேசத் தொடங்கியுள்ளனர்.

*

தாயகத்தைத் தருக்கர்கள் அடிமைப் படுகுழியில் தள்ளிய போது, செல்வத்தைச் சுரண்டிய போது, தொழில்களை நசுக்கிய போது, அறிவை அழித்தபோது, தன்மானத்தை ஒழித்தபோது, அடக்குமுறையை அவிழ்த்து விட்டபோது, உன்னை ஈன்றெடுத்து இயல்புகளை அளித்து, இயற்கைச் செல்வத்தால் உன்னை ஊட்டி வளர்த்த தாயகம் தலைவிரி கோலமாக்கப்பட்டு, மானமழியும் நிலைக்கு ஆளாக்கப்பட்டு, வடவரால் வதைக்கப்பட்டபோது, என்ன செய்துகொண்டிருந்தாய்! ஏதுமறியாத ஏமாளியாக இருந்தாயா? என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துக்கிடந்தாயா? அங்ஙனமாயின், நீ ஓர் அப்பாவி! வீரக்குலத்திலே தப்பிப் பிறந்த பதர்! விளக்கமறியாத வீணன்! தூத்தூ! திருவும் அறிவும், வீரமும் மாண்பும் பொங்கும் நாட்டிலேயா இத்தகைய ஏமாளி பிறந்திட வேண்டும்! உன் தாயகம், தன்னரசு இழந்ததை, தன் மொழி இழந்ததை, விழியைக் குளமாக்கிக் கொண்டதைக் கண்டறியும் அளவுக்குமா உனக்குக் கருத்துத் தெளிவு ஏற்படாமற்போய்விட்டது! எடா! மூடா!! உன்னைச் சுற்றிலும் அழகிய மலையும், எழிலோங்கும் ஆறுகளும், பச்சைப் பசேலென்ற வயலும், பாங்கான பல தருக்களும் இச்சையூட்டத்தக்கனத்துணையோ வளம் இருந்தும் வறுமை நம்மை வாட்டிடக் காரணமென்ன? உழைப்பு ஏன் வீணாக்கப்படுகிறது? உண்டு கொழுத்திடுபவன், உழைத்திடக் காணோமே, அது ஏன்? கொட்டிக்கொடுக்கும் வரிப் பணம் வேறு எங்கோ கொண்டு செல்லப்படுகிறதே, சரியா? பட்டியில் மாடுகள்போல, ஆளவந்தார்கள் உள்ளனரே, முறையா? என்றெல்லாம், எண்ணிப் பார்த்திடத் தெரியவில்லையா உனக்கு, பேதையே!. அறிவுக் களஞ்சியத்தின் அழகினைக் கெடுத்திடும் அவமானச் சின்னமே! வெட்கப்படு! வெட்கம் வேலாகிக் குத்தட்டும் உன்னை! தலைகுனிந்து நட—தையலரும் தன்னரசுக்கான போர் புரிய முன்வந்தபோது. 'அசை'போட்டுக் கொண்டு கிடந்தோமே என்றெண்ணி, முக்காடிட்டுக்கொண்டு நட! விடுதலைப் போரிலே வீழ்ந்துபட்ட வீரர், நடந்து சென்ற பாதையில் காணக்கிடைக்கும் குருதிக்கரையிலே, கண்ணீர்சொரிந்து வேண்டிக்கொள்!

ஓர் நாள், இப்படி 'ஏமாளிகள்' கேட்கப்படுவர், திராவிட விடுதலை கண்ட பிறகு, விடுதலைப் போரினை வெற்றிகரமாக நடாத்திய மாவீரர்களால்!

திரு இடத்தின் இன்றைய தாழ் நிலையை அறியுமளவுக்குத் தெளிவு அற்றுக்கிடக்கும் ஏமாளிகள், கண்டிக்கப்படுவர், ஆனால் அனுதாபத்தோடு! பரிதாபம்! அவன் கருத்துக் குருடன், ஆகவேதான் தந்தையர் நாட்டினை மீட்டிடும் தன்மானப் போரில் ஈடுபடாதிருந்தான், என்று எண்ணுவர். ஆனால் அறிவில் தெளிவு இருந்தும், உண்மைக்காகப் பரிந்து பேசவும், உரிமைக்காகப் போரிடவும் முன் வராததுடன், எத்தகைய ஏசல், எதிர்ப்பு, இடர் இன்னல், பழி பாதகம், எது வரினும் அஞ்சாது, அறப்போரில் ஈடுபட்டு, அன்னையின் கரத்தினில் விலங்குகளா! என்று ஆர்த்தெழுவோரை, எதிர்த்திடும் அறபர்கள், காட்டிக்கொடுக்கும் கயவர்கள், எதிரிகளுடன் கூடிக்கொண்டு கொலுப் பொம்மைகளாகும் துரோகிகள் இருக்கிறார்களே, இவர்களை, விடுதலைபெற்ற திராவிடம், சும்மாவிடாது!

பெற்ற தாயை மானமழித்திடத் துணிந்தவனுக்குத் தாள்பிடித்துக் கிடந்தவனே, பிறந்த பொன்னாட்டை மாற்றான் சீரழிக்கும் போது கண்டு, கரம் அசைக்காமல் அவனுக்குக் கட்டியம்கூறிக்கிடந்த கடையனே! உனக்கென்று ஒரு மொழியும், மொழிவழி ஓர் சீரிய வாழ்வும் அளித்து, உனக்காகத் தென்றலையும் தேனையும், தினையையும் நெல்லையும், தீஞ்சுவைக் கனிகளையும் சுவை மிகு சுனைகளையும் நாறுறுகளையும் களிறுகளையும், ஓங்கி வளர்ந்த வரையினையும் சந்தனத் தருக்களையும், கடல் முத்தையும் கட்டித் தங்கத்தையும், மலர்க்கொல்லைகளையும் மான் கூட்டங்களையும், வேட்டைக்கு வேங்கையையும் வீட்டுக்கு ஆவினங்களையும், எங்கும் பச்சையையும், உன் இச்சையைப் பூர்த்தி செய்ய எல்லா வளங்களையும் தந்த தாயகத்தை, மாற்றான் வெள்ளாட்டியாக்கி, கூந்தலைக் கலைந்து, குங்குமத்தைக் குலைத்து, ஆடையைக் குறைத்துக் காலால் உதைத்து, ஏடி! வெள்ளாட்டி! தொட்டிமுக்கும் வேளையிலே, வெட்டுவேன் என்று பதட்டம் பேசுகிறாய், என் சுட்டு விரல் அசைத்தால், உன்னைச் சுக்கு நூறுக்க என் சூறுவளிப் படை கிளம்பும், உனக்கேன் ஒரு தனிக் கொற்றம், வீழ்ந்துகிட என் கொட்டகையில், பிழைத்துப் போ, நான் தரும் பிச்சையை உண்டு, பேய்க் கோலம் காட்டுவாயேல், வாட்டிடுவேன் சூட்டுக் கோலால்!—என்று கொக்கரித்த போது, மாமிசப் பிண்டமே! உன் இரத்தம் கொதிக்கவில்லையா? இதயம் துடிக்கவில்லையா? உடல் பதறவில்லையா? கண்களை இறுக மூடிக் கொண்டாயா! எப்படி உன் மனம் இடம் தந்தது, தாயகத்தைக் காலின் கீழ் போட்டு மிதித்தவனுக்குக் கை கட்டி வாய் பொத்தி நிற்க! சிறு குத்திட்டி கிடைக்கவில்லையா உனக்கு, ஒரு முழக் கயிறுக்கும் பஞ்சமா! ஆழ்கிணறோ, மலை உச்சியோ, கிடைக்காமலா போய் விட்டது, உயிரையும் வைத்துக்கொண்டு, உன் அன்னைக்குப் பங்கம் விளைவித்தவனை எதிர்க்கும் வீரப்போரில் ஈடுபடாமலிருக்க உன்னால் எப்படி முடிந்தது? கோழையானால் கூடப் பரவாயில்லை, மன்னித்து விடலாம்! கொடியவனே! நீ, மாற்றான் கோட்டைக்குக் காவலாக அல்லவா நின்றிருந்தாய்! உன் உடன் பிறந்தாளின் உடலைக் கழுகும் காக்கையும் கொத்தித் தின்ற வேளையில், கூடப் பிறந்த கேடே! நீ, மாற்றான் தந்த மதுவையும் மாமிசத்தையும் உண்டுகிடந்தாயே! இயற்கையாகச் சுரக்க வேண்டிய நாட்டுப் பற்று, எழாத உள்ளத்தைக் கொண்டு, ஒரு உடலம் நிற்பதா—எம் கண்முன் நடமாடுவதா—எமது தாயகம் இத்தகைய இழி மகனை, இனத் துரோகியைச் சுமந்து கொள்வதா, விடுதலைப் போரிலே வீரர் கொட்டிய குருதியால் புனிதமாக்கப்பட்டுள்ள இந்த மண்ணில், மாபாவி! உன் நிழல் படுவதும், கேவலம்! ஓடிப் போ! மனித உருவம் தாங்கி நிற்கும் மிருகமே, எமது கோபம், வேலாக, வாளாக, தூக்குக் கயிறாக, துப்பாக்கிக் குண்டாக மாறுமுன், ஓடிப் போ! கிழங்கு தோண்டித் தின்று பிழைத்துக் கொள்! கிழப்புலி கொன்று தின்ற மானின், மிச்சம் மீதி கிடைத்திடின், தின்று பசிபோக்கிக்கொள்! வீரக் கோட்டத்தைக் களங்கப் படுத்தாதே! அகமும் புறமும் கண்டு அக மகிழ்ந்த தமிழர் திரு நாட்டில், வாயும் வயிறும் பெரிது

என்றெண்ணிக் கிடந்த வஞ்சகனே, உனக்கு இடம் இல்லை! ஓடி விடு, ஓடிவிடு, காதலனைக் களத்திலே இழந்த காரிகையரின் கண்ணீர் உன்னைச் சுட்டெரித்து விடும், பல்விழுந்த பாட்டியின் சொல்லம்பு கூட உன்னைச் சல்லடைக் கண்ணாக்கிவிடும், சிறார் காணின், அவர் தம் விழி சிவந்திடும், உன்னைப் பற்றி மேலும் பேசிடின், எம் வாயும் நாறிடும். நாசகாலனே, நாட்டைக் காட்டிக் கொடுத்தவனே, ஓடு, ஓடு, உனக்கு ஏற்ற ஓர் உதவாக் கரை இடம் தேடி, ஓடு,"—என்றெல்லாம் கண்டிப்பர், கடமையை நிறைவேற்றி வெற்றி கண்டோர்—எதிர்கால இன்பத் திராவிடத்தில்.

*

மெல்லிய கோடுகள் தெரிகின்றன, கம்யூனிஸ்டுகளுக்கு-ஆகவேதான், மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், தென்னாட்டுக்குத் தொழில், சேலத்து இரும்பு, நெய்வேலி நிலக்கரி, — என்று பேசிப் பார்க்கிறார்கள்.

இப்போதும் இவர்களும், காங்கிரசிலே உள்ளவர்களில் சிலரும், தென்னாட்டுக்குத் தொழில் வளம் செய்துதர வேண்டும், திட்டங்கள் வகுப்பதில் ஓர வஞ்சனை காட்டுவது கூடாது, என்றுதான் டில்லியிடம் கேட்கிறார்கள், விண்ணப்பித்துக் கொள்கிறார்களே தவிர, ஏன் இந்தக் கேவல நிலை, தொட்டண்ணன் தோட்டத்திலே வெட்டண்ணன் மாடு மேய்வானேன், அதைக் கொஞ்சம் பிடித்துக்கட்டு என்று புட்டண்ணன் கெஞ்சிக் கிடப்பானேன், என்று எண்ண மறுக்கிறார்கள்.

வாழ வழி இருக்க, வளம் யாவும் குறைவின்றி இருக்க, வாழும் வழியை அமைத்துக் கொள்ளும் அறிவாற்றல் இங்கிருக்க, வாழ்ந்தவர்கள் நாம் என்பதை நினைவூட்ட வரலாறு இருக்க, எதற்காக, வடவரிடம் நமது பிடரியைக் கொடுத்துவிட்டு, பிறகு, "மெள்ள, மெள்ள" "வலிக்கிறது, வலிக்கிறது," என்று வேதனைக் குரலொலித்துக் கிடக்க வேண்டும். இங்கு இல்லாத எதையும் நமக்காகப் பெற்றுத் தரும்படி, வடவரை நாம் கேட்டோமில்லை—இங்கு புகுந்து ஆதிக்கம் செலுத்திக்கொண்டு, எமது செல்வம் எமக்குப் பயன் படாமற் செய்யும் கொடுமையைத் தானே எதிர்க்கிறோம். மாதாவுக்கு மத்தாப்பூ வண்ணச் சேலையா கேட்கிறோம், அன்னையின் ஆடையை, அக்ரமக்காரனே, பிடித்திழுக்கத் துணிகிறாயே, ஆகுமா இந்த அக்ரமம் என்றல்லவா கேட்கிறோம். உரிமையைக் கேட்கிறோம், உபகாரம் அல்ல. இழந்ததைக் கேட்கிறோம், இரவல் பொருள் அல்ல, எம்மிடமிருந்து பறித்துக் கொண்டதைக் கேட்கிறோம், பிச்சை அல்ல, இந்த மூலக் கருத்தை உணரா முன்னம், வடவரின் கொட்டம் அடக்கப்படுவது முடியாத காரியமாகும். தம்பி! இந்த மூலக் கருத்தைத் தான் உன் துணைகொண்டு, நமது கழகம் நாட்டிலே பரப்பிக்கொண்டு வருகிறது. பளிச்செனத் தெரியாவிட்டாலும், விடிவெள்ளியின் வரவுக்கான வண்ணம், மெல்லிய அளவிலே தெரியத்தான் செய்கிறது.

*

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் வகுப்பு வாதியா என்று கேட்டுப் பார் காங்கிரசாரை? பகைப் புயலால் பதவி ஆட்டம் கொடுத்த போது, அதைக் காத்திட முடியாமற் போய்விட்ட பரிதாபத்துக்குரிய பெரியவர் என்று வேண்டுமானால் கூறுவார்கள் — அவரை வகுப்பு வாதி, பிளவு மனப்பான்மையினர் என்று காங்கிரசாரே கூற மாட்டார்கள். ரொம்பப் பொறுமைசாலிகூட அவர், அதுமட்டுமல்ல, போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று கருதுபவர், இல்லையானால், தம்பி, நாடாண்ட அந்த நல்லவர், முப்பதாண்டுகளுக்கு மேலாக மக்கள் தொண்டு புரிந்து உரம் பெற்றவர், இப்போது, ஒரு பள்ளிக்கூடம், குருகுலம் நடத்தினால் போதும், ஏதோ கண்ணைப் பறித்த கடவுள் இந்தக் கோலாவது கொடுத்தாரே என்ற முறையில் முதலமைச்சர் பதவி போனால் போகட்டும், ஏதோ குருகுல அதிபர் எனும் நிலையாவது கிடைக்கட்டும், என்று திருப்தி அடைவாரா. அவ்வளவு நல்லவராலேயே, வடநாடு நடந்து கொள்ளும் போக்கும், தென்னாடு புறக்கணிக்கப்படும் தன்மையும் கண்டு, சகித்துக்கொள்ள முடியவில்லை.

நம் ராஜ்யத்தில் எவ்வளவு வரிபோட முடியுமோ அந்த அளவுக்குப் போட்டாகி விட்டது.

மத்ய சர்க்காரிடமிருந்து கிடைப்பது அதிகமாக இல்லை.

மத்ய சர்க்காரிடமிருந்து உதவி வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்பது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்குறைவு. தலைவிதி என்றும் நினைத்துக்கொண்டு நாம் சும்மா இருந்துவிடுகிறோம்.

மத்ய சர்க்காரிடம் இதை வற்புறுத்த வேண்டும்.

கட்சிச் சார்பில்லாமல் போரிடவேண்டும்—அழுகிற பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும். ஆகையினாலே தமிழ் நாட்டு மக்கள் அதிகக்கூச்சல் போடவேண்டும். அப்போதுதான் ஏதாவது கிடைக்கும்.

நமது மந்திரிகள் மத்ய சர்க்காரிடம் சண்டை பிடித்து வெற்றிகாண வேண்டும்.

ஆகஸ்ட்டு 23-ல், மேல் சபையில் பேசுகிறார் இதுபோல!

அழுகிற பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும் என்கிறார்!

அழுகிற குழந்தைக்கு வாழைப் பழம் என்றோர் பழமொழி தெரியுமல்லவா, தம்பி, அதாவது கிடைக்காதா என்று ஏங்குகிறார் சுப்ரமணியனார்.

"ஐந்து கண்ணன் பிடித்துக் கொள்வான்" என்று மிரட்டுவது போல, ஐந்தாண்டுத் திட்டம் என்று டில்லி கூறிவிடுகிறது!

இங்கே குழந்தை அழுகிறது—குடல் வற்றிப்போகிறது,–அல்லது மிரட்டி அடக்கப்படுகிறது. அங்கே? வடக்கே?

வடக்காவது, தெற்காவது, எல்லா இடத்துக்கும் வறுமை பொதுவாகத்தான் இருக்கிறது என்று பொது உடைமை பேசுகிறார்களல்லவா, அவர்களின் முகத்தில் அறைவதுபோல, சர்க்கார் இலாகாவின் புள்ளி விவரமே பேசுகிறது. சராசரி வருமானம் தலைக்கு, வடக்கே **600**—தெற்கே **300**.

புள்ளி விவரங்கள்தான் பொது உடைமையருக்குப் பூஜா மாடப் பொருளாம். இதற்கு என்ன சொல்கிறார்கள், 600 வடக்கே—300 தெற்கே. வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்லும்போது எல்லாத் திக்குகளுக்கும் தம்மைக் காவலராக்கிக் கொண்டுவிட்டதாக மனப்பால் குடிக்கும், 'மார்க்சால் மன்றம் ஏறியோர்' பேசுகிறார்கள், கேலியுடன், வடக்காவது தெற்காவது, என்று.

**600—300**— இதற்கு என்ன விளக்கமளிக்கிறார்கள், 600

அங்கே. 300 இங்கே! என்றால் என்ன பொருள்?

மூன்று வேளை உணவு அங்கே பகல் பட்டினி அல்லது இராப் பட்டினி, இங்கே. மானம் காப்பாற்றப்படும் அளவு ஆடை அங்கே, இங்கே அரை ஆடை. வடக்கு வாழ்கிறது, வளருகிறது—தெற்கு தேய்கிறது. தேயும் தெற்கில் இந்த 'மேதைகள்' வேறு மேய்கிறார்கள்.

பொதுப்படையான புள்ளி விவரம் போதாது என்று போக்கை மாற்றிக்கொள்வதற்கு ஒரு மேலிடம் பார்த்துக்கிடக்கும் அந்த மேதைகள், கூறுவரேல், தம்பி, இதோ, விளக்கமான மற்றோர் புள்ளிவிவரம், இதுவும் சர்க்கார் தருவதுதான், எடுத்துக் காட்டு.

விவசாயிக்கு சென்னையில் நாளொன்றுக்குக் கிடைக்கும் ஊதியம், சராசரி, ஆடவருக்கு 1—4—0 பெண்களுக்கு 0—12—0

பெப்சுவில் ஆடவருக்கு 2—8—0 பெண்ணுக்கு 1—8—0

மேற்குவங்கத்தில் ஆடவருக்கு 1—12—0 பெண்டிருக்கு 1—4—0

கொத்துவேலை கொல்லன்வேலை போன்ற வகைகளில் ஈடுபட்டவர்களுக்கு இங்கு, 2 ரூபாயிலிருந்து 3 ரூபாய் வரையில் கிடைக்கிறது,

பெப்சுவில் நாலு முதல் ஐந்து வரையில் கிடைக்கிறது.

வடக்கு ஆதிக்கம் செலுத்துவதால் வந்துற்ற அவதியை விளக்க, இந்தப் புள்ளி விவரம் போதாதா போதும்பொறுப்பைஏற்றுக் கொள்ளத் தயங்காதவருக்கு, நாட்டுப்பற்றினை இழந்துசோற்றுத் துருத்தியாவது கேவலம் என்ற உணர்ச்சிகொண்ட அன்பர்களுக்கு. எம்மிடம் என்ன இருக்கிறது தெரியுமா, சக்கரம்—சம்மட்டி என்று 'விருதுகளை'க்காட்டியே வாழ்ந்து விடலாம் என்று எண்ணிக் கிடப்பவர்களுக்கு? புள்ளி விவரம் மட்டும் போதாது, தம்பி, பன்னிப் பன்னிச் சொல்லியாக வேண்டும், பள்ளிச் சிறுமிகள் பாடிக் காட்டினார்களாமே கவர்னருக்கு. அதுபோலப்பாடியும் காட்ட வேண்டும், நாடகம் கூடத்தான். எல்லாம் எதற்கு,

எங்கள் நாடு
எழில் பொங்கும் நாடு
இனி எவர்க்கும் அடிமை அல்ல
எமக்கது சொந்த நாடு!
திராவிட நாடு!
திராவிடர்க்கே!

என்ற எழுச்சிப் பண்பாடி, தாயகத்தின் தளைகளைப் போக்கி, தன்னரசு காணத்தான். தம்பி, இத்தகைய உன்னதமான பணியாற்றும் வாய்ப்பு நமக்குக் கிடைத்தது பற்றி எண்ணும்போது பூத்தார்வம் பிறக்கிறதல்லவா?

அன்பன்,

**அண்ணாத்துரை.**

★

# பறந்தே போய்விட்டது!!

மின்னல் வேகத்தில் சென்றது! வயலோரத்தில் இறங்கிற்று! வசீகரமான மங்கையர் இருவர், கீழே இறங்கிவந்தனர். அவர்களைப்பார்க்கும்போதே ஒருமாதிரி மயக்கம் மேலிட்டது! அவர்கள் பேசிய பாஷை புரியவில்லை. இங்குமங்கும் பார்த்துவிட்டு, கலகலவெனச் சிரித்துவிட்டு, அந்த அணங்குகள் சென்றனர், மீண்டும் மின்னல் வேகத்தில் சென்றது, பறக்கும் தட்டு!

சிகப்புநிறம், நான் கண்டேன்!

நான் பார்த்தது, நல்ல நீலம்!

இரண்டு 'கலரும்'தான், மாறிமாறி!!

சந்திரமண்டலத்து ஒற்றர்கள் வருகிறார்களாம், பறக்கும் தட்டுகளில்!

இல்லை, இல்லை, வியாழனிலிருந்து வருகிறார்கள்—விசேஷ தூதுவர்கள்!!

மேலே இருந்து மண்ணுலகின்மீது படை எடுப்பாம்! இந்த பறக்கும் தட்டுகள், இங்கே உள்ள படைபலம்பற்றி அறிந்துபோக வந்திருக்கிறார்களாம்!

மிக வலிவான 'மின்சார' சக்தி, பறக்கும் தட்டு கொண்டிருக்கிறதாம்—ஒரு சிறு 'கதிர்' மூலம், பூலோகமே பொசுங்கிப் போகுமாம்.

அணுகுண்டு செய்கிறார்கள், இதனால் நமக்குப் பேராபத்து வரக்கூடும்—அதைத் தடுக்க இப்போதே ஏற்பாடு செய்யவேண்டும் என்றுதான் பறக்கும் தட்டு வருகிறது!

பிரான்சிலே கூடப் பார்த்தார்களாம்!

ஆமாம்! பசிபிக்கடலிலே வட்டமிட்டதாம்!

பண்ருட்டியில் பறந்ததாமே!

ஆமாம், 'பௌர்ணமி' போன்றப் பிரகாசம் இருந்ததாம்.

பேசாதார் இல்லை! பத்தி பத்தியாக இதழ்களில் 'செய்திகள் விளக்கங்கள், விமரிசனங்கள், பறக்கும் தட்டுபற்றி!

செசில்பொவெல் எனும் விஞ்ஞானப் பேராசிரியர் இந்த 'பறக்கும் தட்டு' புரளியை இப்போது உடைத்தெறிகிறார்!

பிரிட்டிஷ் விஞ்ஞான விற்பன்னரான, பொவெல் 'பறக்கும் தட்டு' என்று பீதி கிளப்பியது, வெறும் பலூன்—விஞ்ஞான ஆராய்ச்சிக்காகச் செய்து வானத்திலே பறக்கவிடப்பட்டதுதான் என்பதை விளக்கிட முன்வந்திருக்கிறார்.

பிரிஸ்டல் நகரில் உள்ள அவருடைய ஆராய்ச்சிக் கூடத்துக்கு, பல பத்திரிகை நிருபர்களை அழைத்துக் கொண்டுபோய், ஒரு மூடிபோட்ட இடத்தைக் காட்டி, மூடியிலிருந்த துணியை அப்புறப்படுத்திய படி சொன்னாராம், "இதோ பாருங்கள், பலரை பீதிகொள்ளச் செய்த பறக்கும் தட்டு" என்று ஒரு 200 அடி உள்ள பழுப்பு நிறமான பலூனைக் காட்டினாராம்.

இந்த பலூனில், போட்டோ எடுக்கும் கருவியை அமைத்து மேலே செல்லச் செய்கிறார்கள் விஞ்ஞானிகள்—அவர்களுடைய ஆராய்ச்சிக்குத் தேவையான 'படப்பிடிப்புகள் தானாக நடைபெற்றதும், அந்த போட்டோ எடுக்கும் கருவி, தானாகவே பூமிக்கு வந்து சேருகிறது, பலூன் மேலும் பறந்து செல்கிறது. அந்த பலூனில் மீதிக்கதிர் விழுவதால் பல கலர் தெரிகிறது, மற்றதெல்லாம் பீதியும் ஆச்சரியமும் அடைந்த மக்களுடைய மனதிலே ததும்பும் கற்பனை—அவ்வளவுதான்! என்று விஞ்ஞானி விளக்கமளித்தார். வதந்திகளை வாரி வீசிடும் திறமைசாலிகளுக்கு, ஒரு நல்ல வாய்ப்பு போய்விட்டதே என்று வருத்தமாகக்கூட இருக்கும்.

இந்த 'பலூன்கள்' எப்போது எந்த இடத்திலே செல்கிறது என்பது கூட எங்களுக்குத் தெரியும் — இது எப்போது எந்த இடத்திலே செல்கிறதோ, அந்த வட்டாரத்திலேதான் 'பறக்கும் தட்டு' பற்றிய வதந்தியும் கிளம்பிற்று என்பதையும் நாங்கள் தெரிந்துகொண்டோம் என்று கூறினர்.

பறக்கும் தட்டு, பறந்தே போய் விட்டது!!

★


செப்டம்பர் 16ம் முதல்
சென்னை
பாரகன்
பிராட்வே
ராக்ஸி
மற்றும் தென்னாடெங்கும்
டி.ஆர்.ஆர். புரொடக்ஷன்ஸ்
கோமதியின்
காதலன்
கதை தேவன் ஆனந்தவிகடன்
டைரக்ஷன் ப.நீலகண்டன்
ஸ்டூடியோ ரேவதி
...நேஷனல் பிக்சர்ஸ்...
G.H.RAO